بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 7

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

இதழ் 37

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1444 - ஸஃபர் 18 ★ தபூக் 15 - ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ★ 15 செப்டம்பர் 2022

## அல்லாஹ்வின் கட்டளை

وَاکۡتُبۡ لَنَا فِیۡ ہٰذِہِ الدُّنۡیَا حَسَنَۃً وَّفِی الۡاٰخِرَۃِ اِنَّا ہُدۡنَاۤ اِلَیۡکَ ؕ

**பொருள் :**

நீ எங்களுக்கு இவ்வுலகிலும், மறுமையிலும் நன்மையினை எழுதுவாயாக. நிச்சயமாக நாங்கள் உன்னிடமே வந்துவிட்டோம்.

(அல்அஃராஃப் : 157)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நினைவிற்கொள்ளுங்கள். தனது செல்வத்திலிருந்து தேவையுடைய ஒருவருக்கு எதுவும் கொடுக்காதவர் மட்டுமே கருமி கிடையாது**

**மாறாக, ஒருவருக்கு அல்லாஹ் ஞானத்தை வழங்கி அதனை அவர் பிறருக்கு கற்றுக் கொடுப்பதிலிருந்து விலகுவாரோ அவரும் கருமி ஆவார்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

நினைவிற்கொள்ளுங்கள். தனது செல்வத்திலிருந்து தேவையுடைய ஒருவருக்கு எதுவும் கொடுக்காதவர் மட்டுமே கருமி கிடையாது. மாறாக, ஒருவருக்கு அல்லாஹ் ஞானத்தை வழங்கி அதனை அவர் பிறருக்கு கற்றுக் கொடுப்பதிலிருந்து விலகுவாரோ அவரும் கருமி ஆவார். அவர் கற்றுக் கொண்டுவிட்டால், நமக்கு மதிப்பில்லாமல்போய் விடும் அல்லது வருமானத்தில் குறைவு ஏற்பட்டுவிடும் என்ற எண்ணத்தால் தமது அறிவையும், கலைகளையும் பிறருக்கு கற்றுக் கொடுக்காமல் இருந்தால் அது ஷிர்க் ஆகும். ஏனென்றால், அந்நிலையில் அவர் அந்த அறிவை அல்லது (அந்தக்) கலையை தமக்கு மட்டுமே உரிய ரிஸ்க் (செல்வம்) ஆகவும், இறைவனாகவும் கருதுகிறார். அதேபோன்று, எவர் தனது நற்பண்புகளுடன் செயலாற்றுவதில்லையோ அவரும் கருமி ஆவார். நல்லாழுக்கத்தை வழங்குவது என்பதன் பொருள் இதுவே ஆகும். அதாவது, அல்லாஹ் தனது தனிப்பட்ட அருளால் நற்பண்புகளை (மனிதனுக்கு) வழங்கியிருக்கின்றான். எனவே மனிதன் அவனது படைப்பினங்களுடன் அந்த நற்பண்புகளுடன் செயல்படவேண்டும். மக்கள் அவரது முன்மாதிரியைக் கண்டு சுயமே தங்களிடத்தில் நல்லொழுக்கத்தை உருவாக்கிக் கொள்ள முயற்சி செய்வார்கள்.

நாவை மென்மையாகவும், மென்மையான சொற்களுடனும் பயன்படுத்துவது மட்டுமே நல்லொழுக்கம் என்பதற்கு பொருள் அல்ல. மாறாக, வீரம், சகிப்புத்தன்மை, வெட்கம் மேலும் எந்த அளவிற்கு மனிதனுக்கு ஆற்றல்கள் வழங்கப்பட்டுள்ளனவோ அவை அனைத்தும் உள்ளபடியே நல்லொழுக்க ஆற்றல்கள் ஆகும். அவற்றை பொருத்தமான இடத்தில் பயன்படுத்துவதுதான் அவற்றை நல்லொழுக்க நிலையின் கீழ் கொண்டுவரும். பொருத்தமான இடத்தில் கோபப்படுவதும் நல்லொழுக்க வடிவத்தை பெற்றுவிடுகின்றது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 393, காதியான் பதிப்பு 2018)

## நபிமொழி

**நல்ல நண்பன் மற்றும் தீய நண்பனுக்குமான உதாரணம்**

ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். நல்ல நண்பன் மற்றும் தீய நண்பனுக்கும் உதாரணம் கஸ்தூரி வைத்திருப்பவரும், கொல்லனின் உலையுமாகும். கஸ்தூரி வைத்திருப்பவரிடம் இருந்து நீர் (இரண்டு விஷயங்களில் ஏதாவது ஒன்றிலிருந்து) இழப்பிற்குரியவராக இல்லை. ஒன்று அதனை நீர் வாங்குவீர் அல்லது அதன் நறுமணத்தை பெறுவீர். கொல்லனின் உலை ஒன்று உம்முடைய வீட்டை அல்லது உமது ஆடையை எரித்துவிடும். அல்லது அவனிடமிருந்து கெட்ட வாடையை நீர் பெற்றுக் கொள்வீர். (புகாரி, தொகுதி 4, பாடம் வியாபாரம், காதியான் பதிப்பு 2008)

**ஒரு வசனத்தை மாற்றிவிட்டு அந்த இடத்தில் வேறொரு வசனம் வைக்கப்பட்டதாக எனக்கு வரலாற்றிலிருந்து ஒரு வசனம் கூட நிரூபணம் ஆகவில்லை.**

**திருக்குர்ஆனின் ஒரு கட்டளை முதலில் ஒரு மாதிரியாக இருந்தது. பின்னர் மாற்றப்பட்டுவிட்டது என்பதற்கு எனக்கு எந்த சான்றும் கிடைக்கவில்லை.**

وَاِذَا بَدَّلۡنَاۤ اٰیَۃً مَّکَانَ اٰیَۃٍ ۙ وَّاللّٰہُ اَعۡلَمُ بِمَا یُنَزِّلُ قَالُوۡۤا اِنَّمَاۤ اَنۡتَ مُفۡتَرٍ ؕ بَلۡ اَکۡثَرُہُمۡ لَا یَعۡلَمُوۡنَ

( அந்நஹ்ல் : 102 )

இந்த வசனத்திற்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் விளக்கமளித்தவாறு கூறுகிறார்கள் :

சில திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் இந்த வசனத்திற்கு இவ்வாறு பொருள் வழங்கியுள்ளனர். அதாவது, திருக்குர்ஆனின் ஒரு வசனம் ரத்து செய்யப்பட்டு மற்றொரு வசனம் இறக்கப்படும்போது, திருக்குர்ஆன் வேதம் இறைவேதமாக இருந்திருந்தால் அதன் வசனங்கள் ஏன் ரத்து செய்யப்பட்டன? எனவே நீர் பொய்யர் ஆவீர்கள் என்று நிராகரிப்பாளர்கள் ஆட்சேபனை செய்ததாக சில விரிவுரையாளர்கள் கூறியுள்ளனர்.

என்னை பொறுத்தவரை, இந்த பொருள் சரியானதல்ல. ஏனெனில், ஒரு வசனத்தை மாற்றிவிட்டு அந்த இடத்தில் வேறொரு வசனம் வைக்கப்பட்டதாக எனக்கு வரலாற்றிலிருந்து ஒரு வசனம் கூட நிரூபணம் ஆகவில்லை. ஒருவேளை அவ்வாறு நிகழ்ந்திருந்தால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையிலேயே திருக்குர்ஆனை மனனம் செய்திருந்த நூற்றுக்கணக்கான ஹாஃபிழ்கள் இந்த விஷயத்திற்கு சாட்சி வழங்கியிருப்பார்கள். முதலில் இன்ன வசனத்தையும் பின்னர் இன்ன வசனத்தையும் நாங்கள் மனனம் செய்ய வைக்கப்பட்டோம். ஆனால், அதன் பிறகு அந்த வசனம் மாற்றப்பட்டு இன்ன வசனம் எங்களுக்கு மனனம் செய்ய வைக்கப்பட்டது என்பதற்கு சாட்சியங்கள் எதுவும் கிடைக்காதது எதை உணர்த்துகின்றது என்றால், அதுபற்றி எந்த அளவிற்கு கருத்துகள் நிலைபெற்றுள்ளனவோ அவை எந்த அறிவின் அடிப்படையிலும் அமைந்திருக்கவில்லை. மாறாக, அவை யூகங்களை மட்டுமே அடித்தளமாக கொண்டுள்ளன.

சில கட்டளைகள் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் மாற்றப்பட்டன என்பதை நான் மறுப்பவன் அல்ல. ஆயினும், திருக்குர்ஆனின் எந்த ஒரு கட்டளை தொடர்பாகவும், முதலில் அவை இவ்வாறு இருந்தது. பின்னர் அது மாற்றப்பட்டுவிட்டது என்பதற்கு எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை. என்னை பொறுத்தவரை, தற்காலிக கட்டளைகள் திருக்குர்ஆன் அல்லாத வஹீகளாக இறங்கி வந்தன. அவை திருக்குர்ஆனில் இறங்கவே இல்லை. எனவே திருக்குர்ஆனை மாற்றம் செய்வதற்கு அவசியமே ஏற்படவில்லை.

இதன் தொடர்ச்சி - 12ஆம் பக்கம்...

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

## பிரிட்டனின் ஆண்டு மாநாடு-2022ஆம் ஆண்டின் சந்தர்ப்பத்தில் முழு உலகிலும் கலந்து கொண்ட அஹ்மதிகள், அஹ்மதி அல்லாத விருந்தினர்களின் தாக்கங்கள்

**முதலில் நான், ஜல்ஸாவின் ஏற்பாடுகள் முதல் வைன்ட் அப் வரை தன்னலமற்ற முறையில் பணி செய்த அனைத்து ஊழியர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.**

**ஓர் ஒருமைப்பாடு இருந்தது. அதன் காட்சிகளை MTA-வின் கேமராவின் கண்கொண்டு நாம் கண்டுகொண்டோம். இது அல்லாஹ்வின் சிறப்பான அருள் ஆகும். MTA ஊழியர்கள் இந்த அடிப்படையில் நன்றி செலுத்தப்படுவதற்கு உரியவர்களாக உள்ளனர். அதாவது, அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஒருமைப்பாட்டை MTA மூலமாக உலகத்திற்கு காட்டி எதிரிகளின் வாயை அடைத்துள்ளனர்.**

**இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகளை கிறித்தவ மார்க்கம் பெண்களுக்கு வழங்கவில்லை என்பதை ஒப்புக் கொள்வதற்கு நான் ஒருபோதும் தயங்க மாட்டேன். - கிறிஸ்துவ பாதிரியார்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாத்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 12 ஆகஸ்ட் 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு ஸஹுர் மாதம் **12ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

அல்ஹம்துலில்லாஹ் கடந்த வாரம் அல்லாஹ் நமக்கு, பிரிட்டனின் ஆண்டு மாநாட்டை நடத்துவதற்கு நற்பேறு வழங்கினான். அந்த மூன்று நாட்களில் நாம் அல்லாஹ்வின் எண்ணற்ற அருட்களைக் கண்டோம். கோவிட் தொற்று பரவியுள்ளது. எனவே அதன் காரணமாக,கடந்த ஆண்டைப் போன்று சிறிய அளவில் ஜல்ஸாவை நடத்திக் கொள்ளலாம் என்றே இந்த ஆண்டின் துவக்கத்தில் எண்ணம் இருந்தது. ஆனால், பிரிட்டனின் அனைத்து அஹ்மதிகளுக்கும் ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கலாம் என்ற முடிவு கடைசி மாதங்களில் எடுக்கப்பட்டது. இந்த முடிவால், தொடக்கத்தில் நிர்வாகத்திற்கு சிறிது கவலை இருந்தது. ஆயினும், அவர்கள் தயாரிப்புகளை தொடங்கிவிட்டனர். மேலும், நான் கூறியதுபோன்று, பின்னர் நாம் அல்லாஹ் அருட்கள் பொழிந்ததைக் கண்டோம்.

ஜல்ஸாவிற்கான மிகுந்த எதிர்பார்ப்பு இருக்கின்றது. ஆண்டு முழுவதும் எதிர்பார்ப்பு நிலவுகிறது. பெரும் தயாரிப்புகளை நிர்வாகத்திற்கு செய்ய நேரிடுகிறது. ஆனால், பின்னர் ஜல்ஸா துவங்கிவிடும்போது அந்த மூன்று நாட்கள் இமைமூடி இமை திறப்பதற்குள் எப்படி கழிந்தது என்பதே தெரிவதில்லை! இந்த வருடம் பல்வேறு அம்சங்களின் அடிப்படையில் சில மக்களுக்கு சில அச்சங்கள் இருந்தன. சிலர் எனக்கும் கடிதம் எழுதினர். மேலும், கவலையை வெளிப்படுத்தினர். மக்கள் சுயமே அதிக துஆக்களும் செய்து கொண்டிருந்தனர். நானும், துஆக்கள் செய்து கொண்டிருந்தேன். ஜமாஅத்தின் உறுப்பினர்களும் துஆக்கள் செய்து கொண்டிருந்தனர். எவ்வாறு இருப்பினும், அல்லாஹ் அனைத்து சந்தேகங்களையும், அச்சங்களையும் அமைதியில் மாற்றிவிட்டான்.

பரவியிருந்த கோவிட் தொற்றும் அந்த அச்சங்களுக்கு ஒரு காரணமாக இருந்தது. எவ்வாறு இருப்பினும், அதன் சிறிய தாக்கம் அநேகமாக கலந்து கொண்ட சிலரின் மீதே ஏற்பட்டது. ஆயினும், பொதுவாக அல்லாஹ்வின் அருள் அதிகம் உள்ளது.

எவ்வாறிருப்பினும், தற்போது ஜல்ஸா தொடர்பாக சில விஷயங்களை நான் கூற விரும்புகிறேன். ஜல்ஸாவிற்கு பிறகு வரும் அடுத்த குத்பாவில் நான் பொதுவாக ஊழியர்களுக்கு நன்றியும் தெரிவிப்பதுண்டு. மேலும், கலந்து கொண்ட விருந்தினர்களின் தாக்கங்களையும் நான் குறிப்பிடுவது உண்டு. மேலும், ஜல்ஸா தொடர்பான அல்லாஹ்வின் அருட்களும் அதில் குறிப்பிடப்படுவது உண்டு. முதலில் நான், ஜல்ஸாவின் ஏற்பாடுகள் முதல் வைன்ட் அப் வரை தன்னலமற்ற முறையில் பணி செய்த அனைத்து ஊழியர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது வரை அந்த வைன்ட் அப் பணி ஏதாவதொரு வகையில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மேலும், அந்த ஊழியர்கள் பணி செய்து வருகின்றார்கள். அடுத்து ஜல்ஸாவின்போது பல்வேறு துறைகளில் பொதுவாக ஆண் மற்றும் ஊழியர்களும் தமது திறமைகளுக்கேற்ப நல்ல பணி செய்துள்ளனர். எனவே அவர்களுக்கு ஜல்ஸாவில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் நன்றி தெரிவிப்பவர்களாக இருக்க வேண்டும்.

ஒருவரால் ஏதாவது வகையில் பயன்கிடைத்தால், ஒருவர் உங்களுக்கு ஏதாவது உதவி செய்தால், அவருக்கு நன்றி செலுத்துங்கள். இதுவே, இஸ்லாமிய நல்லொழுக்கம் ஆகும். அடியார்களுக்கு நன்றி செலுத்துவதே அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துவதன் பக்கம் அழைத்து செல்லும். பிள்ளைகள், பெரியவர்கள், பெண்கள், என அனைவரும் தொண்டிற்கான உரிமையை செலுத்துவதற்கு முயற்சி செய்தனர். சில குறைகளும், பலவீனங்களும் தெரிய வந்துள்ளன. ஆனால், இவ்வளவு பெரிய ஏற்பாடுகள் செய்யும்போது பலவீனங்கள் ஏற்பட்டுவிடுவதுண்டு. ஆனால், அமைப்பின் பணி என்னவென்றால், அந்த பலவீனங்களையும், குறைகளையும் களைய வேண்டும். உதாரணமாக, லெஜ்னா சகோதரிகளுக்கு உணவு வழங்குதல் துறையில் சில புகார்கள் உள்ளன. அல்லது வேறு சில விஷயங்கள் உள்ளன. அவை தொடர்பாக, மக்களின் கடிதங்கள் வந்துள்ளன. அதனை நான் உடனுக்குடன் நிர்வாகத்திற்கு அனுப்பி வருகிறேன். அதற்கேற்ப, ஆய்வு நடத்தி தமது புகார் புத்தகத்தில் பதிவு செய்து அடுத்த வருடம் எல்லாத் துறையிலும் சிறந்த ஏற்பாடுகள் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

ஆயினும், எவ்வாறு இருப்பினும் பொதுவாக ஊழியர்கள் அதிக பணி செய்துள்ளனர். நல்ல பணி செய்துள்ளனர். பிள்ளைகளும் டியூட்டிகளுக்கு உரிய உரிமையை செலுத்தியுள்ளனர். எவ்வாறு இருப்பினும், அவர்கள் அனைவருக்கும் நான் நன்றி செலுத்துகிறேன்.

MTA-வும் மிகவும் நல்ல முறையில் ஒளிப்பதிவு பணியை செய்துள்ளது. இந்த

முறை ஸ்டுடியோ அனைத்தையும் அவர்கள் சுயமே தயார் செய்துள்ளனர். மேலும், இதன் மூலம் பல ஆயிரம் பவுன்ட்கள் சேமிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டும் இந்த நிகழ்வும் நடைபெற்றுள்ளது. அதாவது, ஏராளமான முன்னேற்றமடைந்த நாடுகளும், முன்னேற்றம் அடையாத நாடுகளும் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளின் போது இணைக்கப்பட்டுள்ளன. அதன் மூலம் இங்கு அமர்ந்திருந்த மக்களும் மற்ற நாடுகளில் வசிக்கக் கூடிய தமது சகோதரர்களை பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஓர் ஒருமைப்பாடு இருந்தது. அதன் காட்சிகளை MTA-வின் கேமராவின் கண்கொண்டு நாம் கண்டுகொண்டோம். இது அல்லாஹ்வின் சிறப்பான அருள் ஆகும். MTA ஊழியர்கள் இந்த அடிப்படையில் நன்றி செலுத்தப்படுவதற்கு உரியவர்களாக உள்ளனர். அதாவது, அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஒருமைப்பாட்டை MTA மூலமாக உலகத்திற்கு காட்டி எதிரிகளின் வாயை அடைத்துள்ளனர். எவ்வாறு இருப்பினும், தற்போது நான் சில அந்நிய விருந்தினர்கள் மற்றும் நம்மவர்களின் தாக்கங்களை எடுத்துரைக்கின்றேன். அல்லாஹ்வின் அருட்களை குறிப்பிடுகின்றேன். ஜல்ஸாவின் மூலமாக அல்லாஹ் உலகில் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எவ்வாறு எட்டவைத்தான் என்பதையும் எடுத்துரைக்கின்றேன்.

நைஜீரியாவைச் சார்ந்த ஒரு சகோதரர் அபூபக்ர் சீய்னி சாஹிப், இவர் ஜமாஅத்தைச் சாராதவர் ஆவார். இவர் ஓர் அஹ்மதியல்லாத ஆலிம் ஆவார்.

நியாமே நகரின் ஒரு பள்ளிவாசலின் இமாமாகவும் இருக்கின்றார். அன்னார் கூறுகின்றார்கள்:

என் மீது எல்லாவற்றையும் விட மிக அதிகமாக தாக்கத்தை ஏற்படுத்திய விஷயம் என்னவென்றால், அது காலத்தின் கலீஃபா அவர்கள் மீது மக்கள் கொண்டுள்ள அன்பு மற்றும் நேசத்தின் தொடர்பாகும். மக்கள் காலத்தின் கலீஃபாவின் ஒரு சைகைக்கு முற்றிலும் கட்டுப்படுதலை வெளிப்படுத்தி வந்தனர். சொற்பொழிவுகளின்போது முழுமையான அமைதி நிலவியது.தொடர்ந்து கூறுகின்றார்கள்: இந்த அன்பை அல்லாஹ் சுயமே மக்களின் உள்ளத்தில் ஏற்படுத்தியுள்ளான் என்றே தோன்றுகிறது. ஏனென்றால், இதில் செயற்கையான அன்பிற்கான எந்த ஐயமும் இருக்கவில்லை.

அடுத்து, ஃபோர்கினோபாஸூ நாட்டைச் சார்ந்த ஜமாத்தைச் சாராத மற்றொரு நண்பர் இஸ்ஹாக் சாஹிப் கூறுகின்றார்கள்:

உங்களுடைய ஆண்டு மாநாடு மிக சிறப்பாக இருந்தது. அதற்கு நிகரான உதாரணம் கிடைக்கவில்லை. இவ்வளவு எண்ணிக்கையில் மக்கள் ஓரிடத்தில் ஒன்றுகூடுவது ஓர் அற்புதத்திற்கு குறைவானதல்ல. ஓர் இமாமிற்கு கட்டுப்பட்டவாறு மக்கள் செயல்படுகின்றனர். மேலும் இந்த ஜல்ஸாவுக்கு நிகர் இந்த ஜல்ஸாதான். ஒருவர் ஒப்புக் கொண்டாலும், ஒப்புக் கொள்ளவில்லையென்றாலும் இன்று உண்மையான இஸ்லாம் அஹ்மதிய்யத்தே ஆகும். மக்கள் அதனை அடையாளம் கண்டு அதில் இணைகின்ற நாள் தொலைவில் இல்லை.

இவை முஸ்லிம்களாக இருக்கும் அந்நியர்களின் கருத்துகளாகும். அல்லாஹ் அவர்களின் கவனத்தை இதன் பக்கம் திருப்பிக் கொண்டு வருகின்றான்.

அடுத்து, ஃபிரன்ச் கயானாவில் அஹ்மதி அல்லாத சிரியன் ஒருவர் இருக்கின்றார். முதல் முறையாக ஜல்ஸாவைப் பார்த்துள்ளார். அரபி பேசக்கூடியவர்களுக்காக மஸ்ஜிதில் MTA-அல் அரபிய்யா மூலமாக ஜல்ஸா நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்னார் கூறுகின்றார்கள்: நான் முதன் முறையாக ஜமாஅத்தின் தூதுச் செய்தியைக் கேட்கிறேன். முதன் முறையாக நான் தங்களின் கலீஃபாவின் சொற்பொழிவைக் கேட்டுள்ளேன். .முஸ்லிம்களில் இவ்வாறு உண்மையான இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகிற்கு எட்ட வைத்து வரும் ஒரு அமைப்பு இருக்கிறது என்பதைக் கண்டு நான் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். மேலும், ஒரு கலீஃபாவின் பைஅத்தின் கீழ் முழு உலகிலும் அந்த ஜமாஅத் பணி செய்து வருகிறது. இன்ஷாஅல்லாஹ், இனி உங்கள் ஜமாஅத்தைக் குறித்து நான் நிச்சயம் படிப்பேன். மேலும், ஆய்வு செய்வேன்.

அடுத்து ஃபிரன்ச் கயானாவைச் சார்ந்த ஒரு ஜமாஅத்தைச் சாராத முஸ்லிம் உள்ளார். அவர் நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்காக வந்திருந்தார். கூறுகின்றார்: யூகே ஜல்ஸா நிகழ்ச்சிகளை நான் முதன் முறையாக கண்டுள்ளேன். நான் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். உங்களது ஜமாஅத் உலகளாவிய ஜமாஅத் ஆகும். எனது சொந்த ஊர் கினி கனாகிரி ஆகும். ஏராளமான நாடுகள் லைவ் ஸ்டீரீம் மூலமாக இந்த ஜல்ஸாவில் கலந்து கொண்டிருக்கின்றன என்பதை நான் ஜல்ஸா நிகழ்ச்சிகளின் நடுவே பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால், கினி கனாகிரி தென்படவில்லையே என்று அப்போது நான் எண்ணிக் கொண்டிருந்தேன். உடனே ஸ்கிரீனில் கினி கனாகிரி ஜமாஅத் லைவில் வீடியோவில் வந்துவிட்டது. அங்கும் உங்களது ஜமாஅத் உள்ளதே என்பதை எண்ணி எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது.

அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: உங்களுடைய கலீஃபா பெண்களுக்கான உரிமைகளைக் குறித்து எடுத்துரைத்தார்கள். அதனால் நான் முஸ்லிமாக இருப்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

லைபீரியாவில் முஸ்லிம் அல்லாத நமது ஒரு விருந்தினர் போப் எம் டோலோ சாஹிப் இருக்கின்றார்கள். அன்னார் மின்சாரத் துறையில் மேனேஜராக பணி செய்கின்றார்கள். கல்வியறிவு படைத்த நபர் ஆவார். கூறுகின்றார்கள்: நான் அஹ்மதி கலீஃபாவின் சொற்பொழிவைக் கேட்டு மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். இஸ்லாத்தில் பெண்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றே இதற்கு முன் புரிந்து வைத்திருந்தேன். ஆனால், இன்று இந்த சொற்பொழிவைக் கேட்டுவிட்டு இஸ்லாத்தில் வேறு எந்த ஒரு மார்க்கத்திலும் கூறப்படாத வகையில் பெண்களின் உரிமைகள் மிகவும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன என்பதை நான் அறிந்து கொண்டேன். அஹ்மதிய்யா ஜமாஅத் மிகவும் வலுவான அமைப்பைக் கொண்ட ஜமாஅத் என்று நான் இதற்கு முன் கேள்விப்பட்டிருந்தேன். இன்று, ஒரு தலைவரின் கரத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத் எவ்வாறு ஒன்றுசேர்ந்துள்ளது என்பதை எனது கண்களால் நான் கண்டுவிட்டேன். இந்த ஜமாஅத் உலகில் அமைதியை நிலைநாட்டுகின்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

ஸேம்பியாவில் காடே போலே சாஹிப் என்ற ஒரு சகோதரர் இருக்கின்றார். தொழில் ரீதியில் அன்னார் ஒரு பாஸ்டர்(PASTER) ஆவார். அன்னார் கூறுகின்றார்:

நான் ஆண்டு மாநாட்டின் கடைசி நாளன்று, உங்களின் கலீஃபாவின் நிறைவுரையைக் கேட்டேன். மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். உங்களின் கலீஃபா அவர்களின் சொற்பொழிவு மிகவும் ஆச்சரியமளிக்கக் கூடியதாக இருந்தது.

அழகிய முறையில் இஸ்லாம் எடுத்துரைக்கும் பெண்களின் உரிமைகளைக் குறித்து நான் ஒருபோதும் அறிந்திருக்கவில்லை. இஸ்லாம் பெண்களின் உரிமையை பறித்துள்ளது. மேலும் பெண்களுக்கு எவ்வகையான சுதந்திரமும் கிடையாது என்றே நான் புரிந்து வைத்திருந்தேன். இஸ்லாம் பெண்களை வீட்டிற்குள்ளேயே அடைத்து வைத்துவிட்டது என்பதே எனது எண்ணமாக இருந்தது. ஆனால், இன்று இந்த சொற்பொழிவைக் கேட்ட பிறகு, எனது பார்வை மாறிவிட்டது.

இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகளை கிறித்தவ மார்க்கம் பெண்களுக்கு வழங்கவில்லை என்பதை ஒப்புக் கொள்வதற்கு நான் ஒருபோதும் தயங்க மாட்டேன்.

அன்னார் ஒரு கிறித்தவ பாதிரி ஆவார்கள். அன்னார் கூறுகின்றார்:

இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகளை கிறித்தவ மார்க்கம் பெண்களுக்கு வழங்கவில்லை.

நாங்கள் எங்கள் பெண்கள் மீது காரணமின்றி அநீதி இழைக்கின்றோம். நாங்கள் பெண்களை எங்களின் அடிமையாக கருதுகின்றோம். ஆண் ஏதாவது ஒரு வலிமையின் அழுத்தத்தால் தமது உரிமையை பலவந்தமாக அடைந்தே தீருகின்றான் என்று உங்கள் கலீஃபா முற்றிலும் சரியாக கூறினார்கள்.

இஸ்லாம் வன்முறைக்கான போதனை வழங்கவில்லை. மாறாக, இஸ்லாத்தின் போதனை மிகவும் அழகானதாகும் என்பதை இன்று நான் உணர்ந்து கொண்டேன்.

அடுத்து, ஐவரிகோஸ்ட்டைச் சார்ந்த தப்லீக்கின் கீழ் இருக்கும் நண்பர் ஒருவர் இருக்கின்றார். அவர் கூறுகின்றார்: பல்வேறு வழிமுறைகளில் ஜமாஅத்தின் அறிமுகம் கிடைத்து வந்தது. ஆனால், யூகே ஆண்டு மாநாடு ஒரு தனித்துவமான முறையில் அறிமுகத்தை எடுத்து வைத்தது.

அவர் முதல் முறையாக ஒரு ஜல்ஸாவை டிவி மூலமாக நேரலையில் பார்த்துள்ளார். ஜல்ஸாவைப் பார்த்து அவர் மீது மிகவும் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

அவர் கூறுகின்றார்: இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் மக்கள் ஒரு முறையான அமைப்பின் நிர்வாகம் மற்றும் வழிமுறையின் கீழ் கலந்து கொள்வது என்பது இதனை வெளிப்படுத்துகிறது. அதாவது, கிலாஃபத்தின் தர்பிய்யத்தின் ஆழமான தாக்கம் அவர்கள் மீது ஏற்பட்டுள்ளது.

அவர் கூறுகின்றார்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கரத்தில் மக்கள் எப்படி பைஅத் செய்தனர் என்று நான் அறிந்திருக்கவில்லை. ஆனால், இன்று, கலீஃபாவின் கரத்தில் மக்கள் பைஅத் செய்வதைப் பார்த்து உள்ளத்தில் மிகுந்த தாக்கம் ஏற்பட்டுள்ளது. அதனை நாவினால் எடுத்துரைக்க முடியாது.

இனி நான் தொடர்ந்து உங்களின் கலீஃபாவின் குத்பாவை கேட்பேன் என்று அவர் கூறியுள்ளார்.

அடுத்து, கோன்கோ கன்ஷாஸா- இங்கு இமிகிரேஷன் டிபார்ட்மென்ட் துறையின் பிரதிநிதி வந்தார். ஜல்ஸாவில் கலந்து கொண்டார். மேலும், அங்கு மக்களுடன் அமர்ந்து எனது சொற்பொழிவைக் கேட்டார்.

அவர் கூறுகின்றார்: இதுவரை நான் ஏன் அஹ்மதி ஆகவில்லை? என்று சிந்திப்பதற்கு இந்த சொற்பொழிவு என்னை நிர்பந்தித்துவிட்டது.

மேலும், இனி ஜமாஅத்தின் மிஷன் ஹவுஸிற்கு வந்து செல்வேன். ஜமாஅத்தைக் குறித்து மேலும் ஆய்வு செய்வேன் என்று வாக்குறுதி வழங்கிவிட்டு சென்றுள்ளார்.

MTA-மூலமாக மக்களின் தர்பிய்யத்தும் நடைபெற்றுவிடுகிறது.

மராவ் ஜமாஅத்தின் மிஷன் ஹவுஸிலும் யூகே ஜல்ஸா பார்ப்பதற்கு ஏற்பாடு இருந்தது. கேமரூன் நாட்டின் ஒரு ஜமாஅத் மராவ் ஆகும். அங்கு ஜல்ஸா பார்த்துக் கொண்டிருந்த மக்களில், பக்கத்தில் உள்ள கிராமத்தைச் சார்ந்த உம்முல் என்ற ஒரு பெண்மணியும் இருந்தார். மூன்று நாள் நிகழ்ச்சிகளிலிருந்தும் பயன்பெற்றார். ஆண்டு மாநாடு நிறைவுற்ற பிறகு அவர் அங்கிருந்த மக்களிடம் இவ்வாறு கூறினார்: நம்மிடம் MTA இருப்பது நமது நற்பேறாகும். MTA ஒரு டிவி சேனல் கிடையாது. மாறாக. அது ஒரு பள்ளிக்கூடம் மற்றும் பல்கலைக் கழகம் ஆகும். அங்கிருந்து மனிதன் தினமும் கல்வி பயில்கின்றான். நாமும் இந்த மூன்று நாட்களில் நிறைய அறிவை பெற்றுக் கொண்டுள்ளோம். நம்மிடம் கேபிளில் MTA உள்ளது (அங்கு கேபிளிலும் MTA இருக்கிறது). எனவே அனைவரும் அதிலிருந்து பயன்பெற வேண்டும். வீடுகளில் அனைவரும் தொடர்ந்து MTA பார்க்கவேண்டும். பிள்ளைகளுக்கும் காட்ட வேண்டும். அனைவரின் இஸ்லாமிய அறிவும் வளரும். குறிப்பாக, காலத்தின் கலீஃபாவின் குத்பாக்களையும் சொற்பொழிவுகளையும் கேட்க வேண்டும். ஏனெனில் அதன் மூலம் நமது ஈமான் அதிகரிக்கும் என்று அவர் அங்கு அறிவுரை செய்துள்ளார்.

கோன்கோ கன்ஷாஸாவிலிருந்தே மற்றொரு சம்பவம் உள்ளது. லீபோ(Ilebo) ஜமாஅத்தில் ஜல்ஸா நிகழ்ச்சிகளை பார்ப்பதற்காக ஜுன்பலி முஸ்லிம்களின் இமாம் அழைக்கப்பட்டிருந்தார். ஜல்ஸா முடிந்த பிறகு அவர் கூறினார்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வழங்கியிருக்கும் இஸ்லாத்தின் உண்மையான போதனையை எவ்வாறு அஹ்மதிய்யா ஜமாஅத் எடுத்துவைக்கின்றதோ, என்னைப் பொறுத்தவரை அது ஜமாஅத்திற்கு மட்டுமே உள்ள தனித்தன்மையாகும். எப்படியாவது ஜமாஅத்தில் இணைந்துவிட வேண்டும் என நான் தற்போது விரும்புகிறேன்.

அல்லாஹ் எனக்கு அதற்கான நற்பேறு வழங்குவானாக.

வில்மா என்ற தப்லீக்கின் கீழ் இருக்கும் ஓர் அல்பானியன் பெண்மணி இருக்கின்றார். அவர் கூறுகின்றார்:

யூகே ஆண்டு மாநாடு ஒரு மகத்துவ மிக்க மாநாடாக இருந்தது. அதில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை அசாதாரணமானதாக இருந்தது. நான் இதுவரை ஜமாஅத்தில் இணையவில்லை. ஆனால், இந்த ஜமாஅத்தின் முக்கியத்துவம் மற்றும் உண்மைத்துவம் தொடர்பாக ஆழ்ந்து சிந்திக்க வேண்டும் என்ற தூண்டுதல் இந்த ஜல்ஸாவின் மூலமாக எனக்கு ஏற்பட்டுள்ளது. மேலும், காலத்தின் கலீஃபாவின் சொற்பொழிவை கேட்ட பிறகு நான் அன்னாரின் கூற்றுகளில் உடன்படுகிறேன். அன்னார் எடுத்துரைத்த கருத்துகளினால் எனது ஈமானில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்ற உணர்வே எனக்கு உள்ளது. இதுபோன்ற ஜல்ஸாக்களில் இனியும் நான் கலந்துகொள்ள வேண்டும் என்பது எனது ஆசையாகும்.

ஃபிரன்ச் கயானாவில் ஓர் ஆஃப்கானிய பெண்மணி இருக்கின்றார். நிறைவுரை கேட்பதற்காக தமது பிள்ளைகளுடன் வந்திருந்தார். அவர் கூறுகின்றார்:

உங்களுடைய ஜமாஅத்தைக் குறித்து நாங்கள் முன்னரே ஓரளவு அறிந்திருந்தோம். ஆனால், யூகே ஜல்ஸாவில் உங்களுடைய கலீஃபாவின் சொற்பொழிவை கேட்டுவிட்டு ஒரு வினோதமான நிலை ஏற்பட்டுவிட்டது. இஸ்லாத்தில் பெண்களுக்கான உரிமைகளைக் குறித்து கேட்ட பிறகு, நமது மார்க்கம் பெண்களின் உரிமைகளைக் குறித்து எவ்வளவு அக்கறை கொண்டுள்ளது? என்று மிகவும் மன நிறைவு கிடைத்துக் கொண்டிருந்தது. கூறுகின்றார்: ஆஃப்கானிஸ்தானில் தாலிபான்கள் நிலைநாட்ட விரும்பும் இஸ்லாத்தில் பெண்களுக்கு எந்த அந்தஸ்தும் கிடையாது. ஆனால், உண்மையில் இஸ்லாம் பெண்களின் உரிமைகளுக்கு முழுமையான உத்திரவாதமாக உள்ளது. இதன் காரணமாகவும் எனக்கு அந்த உணர்வு அதிகமாக ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

லைபீரியாவில் அமோஸ் வோன்ஷீஹ் (Amos wonseah) என்ற ஒரு முஸ்லிம் அல்லாத சகோதரர் இருக்கின்றார். அவர் காவல்துறையில் CID கமாண்டர் ஆவார்.கல்வியறிவு படைத்த மனிதர் ஆவார். அழைப்பை ஏற்று ஜல்ஸாவில் கலந்து கொண்டார். இரண்டாவது நாள் எனது சொற்பொழிவைக் கேட்டு அவர் மிகவும் தாக்கமடைந்ததாக அவர் கூறுகிறார். இரண்டவாது நாள் அவருக்கு அழைப்பு கொடுக்கப்பட்டிருந்தது. மூன்றாவது நாள் அவர் சுயமே வந்துவிட்டார். சொற்பொழிவைக் கேட்ட பிறகு கூறினார்: இஸ்லாத்தைப் பற்றிய எனது சிந்தனை எதிர்மறையாக இருந்தது. அதற்கான சில காரணம் சில முஸ்லிம்களின் நடவடிக்கையாக இருந்தது. ஆனால், இஸ்லாம் ஓர் அமைதி மார்க்கமாகும். அஹ்மதிய்யா ஜமாஅத் எல்லா வகையிலும் மனித இனத்திற்கு தொண்டாற்றுவதில் மும்முரமாக உள்ளது என்பதை ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளைக் கண்டு நான் உணர்ந்து கொண்டேன். எனவே, இஸ்லாத்தைக் குறித்த எனது எண்ணங்கள் மாறிவிட்டன. மேலும், எனக்கு இருந்த ஐயங்கள் விலகிவிட்டன.

இந்தப் பகுதியில் அஹ்மதிய்யா ஜமாஅத் முன்னரே வந்தடைந்திருந்தால் பின்னர் இதற்குள் ஏராளமான மக்கள் ஜமாஅத்தின் மூலமாக இஸ்லாத்தில் இணைந்திருப்பார்கள்.

ஃபிரன்ச் கயானா: அங்கும் ஜமாஅத் அளவில் ஜல்ஸா பார்ப்பதற்கான ஏற்பாடு இருந்தது. அது சிறிய ஜமாஅத் ஆகும். குறைவான மக்கள் அங்கு வந்திருந்தனர். அங்கு ஹைதீ நாட்டைச் சார்ந்த தப்லீக்கின் கீழ் உள்ள இரண்டு கிறித்தவர்கள் நிறைவுரை கேட்பதற்காக வந்திருந்தனர். இருவரும் நண்பர்களாக இருந்தனர். கூறுகின்றனர்:

உங்களின் கலீஃபா தமது சொற்பொழிவிற்காக தேர்ந்தெடுத்துள்ள தலைப்பு பெண்களுக்கான உரிமைகளாகும். இது எப்படிபட்ட தலைப்பு என்றால், பெண்களின் உரிமைகளைக் குறித்து இஸ்லாம் என்ன போதனை வழங்கியுள்ளது? என்று நாங்கள் இருவரும் கடந்த நாட்களில் பேசிக் கொண்ட தலைப்பாகும். இஸ்லாம் பெண்களின் உரிமைகளைக் குறித்து இவ்வளவு முழுமையான, சிறப்பான போதனையை வழங்கியுள்ளது என்பதை நாங்கள் அறிந்திருக்கவில்லை.

இன்று நாங்கள் உங்களின் கலீஃபாவின் சொற்பொழிவைக் கேட்காமல் இருந்திருந்தால், எங்களுக்கு இந்த அழகிய மற்றும் முழுமையான போதனை தெரியாமலேயே போயிருக்கும். இன்றைய காலத்தில் பெண்களின் உரிமைகளைக் குறித்து நிறைய பேசப்படுகிறது. ஆனால், ஆண், பெண் இருவருக்கும் உள்ள பொறுப்புகளைக் குறித்து உண்மையான வடிவில் இஸ்லாம் மார்க்கமே எடுத்து வைத்துள்ளது.

தற்போது, இவர்கள் இருவரும் Life of Muhammad நூலையும் படித்து வருகின்றனர். இன்னும் பல புத்தகங்களையும் கேட்டுள்ளனர்.

மொரீசியஸ் நாட்டின் அறிக்கை : அங்கு, ஒளிபரப்பாகி வந்த நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு மக்கள் ஒன்றுகூடியிருந்தனர். டானியா தியோலே(Tania Diolle) என்ற பாராளுமன்ற உறுப்பினரும் அங்கு வந்திருந்தார்கள். அன்னார் பாராளுமன்ற பிரைவேட் செகரட்டரி ஆகவும் உள்ளார். கூறுகின்றார்:

அருமையான காட்சிகள். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நிகழ்ச்சிகளையும், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பண்பாடுகளையும் காண்பதற்கு இது சிறப்பான அனுபவம் ஆகும். நீங்கள் லண்டன் போன்ற நகரத்தில் இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் பெரிய மார்க்க நிகழ்ச்சிகள் நடத்தி வருவது மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய விஷயம் ஆகும். அன்னார் கூறுகின்றார்: இன்றைய காலத்தில் சமூகம் மற்றும் பொருளாதார ரீதியில் மார்க்கம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆகிவிட்டது என்பது சரியான விஷயம் ஆகும். இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் மக்கள் தங்களை ஆய்வு செய்வதற்காகவும், ஒரு ஆன்மீக நோக்கத்திற்காகவும் ஒன்று கூடுவது பெரிய விஷயமாகும். அதிலும் குறிப்பாக, நாம் அனைவரும் ஒரு கடினமான காலத்தை கடந்து கொண்டிருக்கின்றோம். இதில் உலகம் ஏராளமான நெருக்கடிக்கு இலக்காகி உள்ளது.

என்னைப் பொறுத்தவரை இதுபோன்ற விஷயங்கள் சமூகத்தை சரியான பாதையில் வழிநடத்துவதற்கும், உயர்தரமான ஒழுக்கங்களை நிலைநாட்டுவதற்கும் மிகவும் உதவிகரமானவை ஆகும். எனக்கு இந்த அனுபவம் மிகவும் மகிழ்ச்சிகரமானதாகும். நான் ஏராளமான விஷயங்களைக் இங்கு கற்றுக் கொண்டுள்ளேன். அத்துடன் இந்த தருணங்கள் எனக்கு மிகவும் சிந்திக்க தக்கதும் ஆகும்.

புதிய அஹ்மதிகளும் தமது தாக்கங்களை அனுப்பியுள்ளனர். புர்கினோஃபாஸ்ஃவைச் சார்ந்த ஹவ்வா என்ற ஒரு புதிய அஹ்மதி பெண்மணி இருக்கின்றார்.அவர் கூறுகின்றார்: நாம் அஹ்மதிய்யத்தை உண்மையான இஸ்லாமாக புரிந்து கொண்டு, மற்றவர்களை அஹ்மதிகளாக ஆக்கவேண்டும் என்பதற்காக மட்டும் பைஅத் செய்யவில்லை. மாறாக, நாம் சமூகத்தில் ஒரு முன்மாதிரியான அஹ்மதியாக திகழவேண்டும். நமது சொல்லையும், செயலையும் ஒன்றாக ஆக்கி நமது ஈமானையும் நாம் உறுதிபடுத்தவேண்டும். மேலும், உறுதியான நம்பிக்கையில் முன்னேறவேண்டும் என்பதற்காகவும் பைஅத் செய்துள்ளோம் என்பதை காலத்தின் கலீஃபாவின் தெளிவான சொற்கள் நமக்கு கூறுகின்றன.

இப்போது, ஆஃப்ரிக்க மக்கள் படிப்பறிவு இல்லாதவர்கள் என்று மக்கள் கூறுகின்றனர். ஆனால், தற்போது இந்தப் பெண்மணி கூறுகின்றார்:

நமது சொல்லும், செயலும் ஒன்றாக ஆகிவிடும் அளவிற்கு நாம் நம்மிடத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

கல்வியறிவு படைத்த ஒவ்வொரு அஹ்மதிக்கும், தம்மை கல்வியறிவு படைத்தவராக கருதும் ஒவ்வொரு அஹ்மதிக்கும், ஐரோப்பாவில் வசிக்கக் கூடியவர்களுக்கும், முன்னேற்றமடைந்த நாடுகளில் வசிப்பவர்களுக்கும், இந்த விஷயம் சிந்திக்கத் தக்கதாகும். தமது சொல்லையும், செயலையும் எல்லா இடத்திலும் ஒன்றாக வைக்கவேண்டும் என்று அவர்கள் சிந்திக்க வேண்டும்.

இந்தோனேஷியாவில் ஒரு புதிய அஹ்மதி இருக்கின்றார். அவர் கூறுகின்றார்: யூகே ஆண்டு மாநாடு ஓர் அசாதாரண விஷயமாகும். நான் ஒரு புதிய அஹ்மதி ஆவேன். இந்த இறை ஜமாஅத்தில் நான் எனது ஆன்மீகத்தை அதிகரிப்பதற்கு இது தருணமாகும். மக்கள் கூட்டம் கூட்டமாக இந்த அருளுக்குரிய ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்காக வருவதை நான் கண்டேன். நான் ஜல்ஸாவை டிவியில் தான் பார்த்திருந்தேன் என்றாலும், எனது உள்ளமும், சிந்தனையும் யூகே ஜல்ஸாவில் தான் இருந்தது. இந்த ஜல்ஸாவின் மூலம் இந்த இறை ஜமாஅத்தின் மீதான ஈமான் அதிகரித்துள்ளது. மேலும், நான் எதிர்காலத்தில் மேலும் சிறப்பானவராக ஆகிவிடுவேன்.

கோன்கூ பிரேசில் நாட்டின் ஒரு அறிக்கை உள்ளது.

**பெண்களுக்காக நான் ஆற்றிய உரையை கேட்டுவிட்டு உள்ளூர் லெஜ்னா சகோதரிகள், இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை பரப்புவதற்காக நாங்களும், எங்களது பிள்ளைகளும் எல்லா விதமான தியாகத்திற்காக தயாராக இருப்போம் என்று உறுதிமொழி எடுத்துள்ளனர்.**

அடுத்து, யோரி ஹேமாவான் (Erry Himawan) என்ற ஒரு புதிய அஹ்மதி கூறுகின்றார்: நான் ஒரு புதிய அஹ்மதி ஆவேன். யூகே ஜல்ஸாவை லைவ் ஸ்டிரீம் மூலமாக பார்த்த பிறகு,என்னிடம் ஒரே ஒரு சொல் தான் உள்ளது. ஆச்சரியம் கொள்ளத் தக்கது. நான் ஆச்சரியம் அடைந்துள்ளேன். உலகம் முழுவதும் தமது உறுப்பினர்களை பரவச் செய்துள்ள ஒரே இஸ்லாமிய அமைப்புதான் உள்ளது. உதாரணமாக, யோகவா விட்னஸ் (jehovah"s Witnesses), மோர்மோன்ஸ் (Mormons), அட்வென்டிஸ்ட் (Adventist-SDA), இவை அனைத்தும் கிறித்தவ அமைப்புகள் ஆகும். இவற்றிற்கு லட்சக் கணக்கான உறுப்பினர்கள் உள்ளனர். நூற்றுக் கணக்கான நாடுகளில் பணி செய்து வருகின்றனர். மேலும், எனது கேள்விக்கும் விடை கிடைத்துவிட்டது. அதாவது, முழு உலகிலும் பரவியுள்ள ஒரே இஸ்லாமிய அமைப்பு அஹ்மதிய்யா ஜமாஅத் ஆகும். மேலும், அந்த அமைப்பில் நான் உறுப்பினர் என்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த இஸ்லாமிய அமைப்புதான் எனது இயல்பிற்கும், நடவடிக்கைக்கும் ஏற்ப அமைந்துள்ளது. இனி நான் அஹ்மதியாக மாறி, ஒரு செயல்மிக்க மனிதராக என்னால் ஆக முடியும். மேலும் என்னால், பௌதீக் மற்றும் ஆன்மீக முன்னேற்றங்களை பெறமுடியும்.

கஸகிஸ்தானிலிருந்து பகுவு பாயவ்ஸ் தாவரீன் சாஹிப் கூறுகின்றார்கள்: ஜல்ஸா எனது உள்ளத்தில் ஒரு சிறப்பான தாக்கத்தை

ஏற்படுத்தியுள்ளளது. நான் ஜல்ஸா நிகழ்ச்சிகளை எனது மனைவியுடன் ஆன்மீக சூழலில் கண்டேன். காலத்தின் கலீஃபாவின் சொற்பொழிவு எனது உள்ளத்தில் ஒரு சிறப்பான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனை வார்த்தைகளில் வர்ணிக்க முடியாது. அதேபோன்று, ஏனைய சொற்பொழிவாளர்களின் சொற்பொழிவுகளும் மிகவும் சிறப்பாக இருந்தன. முழு உலக அஹ்மதிகளுக்கும் MTA மூலமாக ஜல்ஸா நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு நற்பேறு கிடைத்தது. அல்லாஹ் அனைத்து ஊழியர்களுக்கும், நிர்வாகத்திற்கும் நற்கூலியை வழங்குவானாக.

அல்லாஹ் இந்த ஆன்மீக உணர்வையும், நிலைமையையும் அடுத்த ஆண்டு ஜல்ஸா வரை நிலைபெறச் செய்வதற்கும், நிரந்தரமாக நிலைபெறச் செய்வதற்கும் தமக்காக துஆ செய்யும்படி அவர் விண்ணப்பித்துள்ளார்.

**ஜிம்பாவேயின் ஒரு புதிய அஹ்மதி எனது சொற்பொழிவை கேட்டபோது, தமது உணர்வுகளை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. அருகில் அமர்ந்திருந்த நண்பர் விசாரித்தபோது அவரால் பதிலளிக்க முடியவில்லை. அவர் ஹாலிலிருந்து சில நிமிடங்கள் வெளியே சென்றுவிட்டார். கண்ணீரைத் துடைத்துவிட்டு மீண்டும் திரும்பி வந்தார். அப்போது, கேட்டபோது, வாழ்க்கையில் முதல் முறையாக காலத்தின் கலீஃபாவை நான் பார்த்துள்ளேன். குரலைக் கேட்டுள்ளேன். எனவே கண்களிலிருந்து கண்ணீர் வந்துவிட்டது என்று அவர் கூறினார்.**

கூறுகின்றார்: எனது வயது 80 ஆகும். எனது முழு வாழ்நாளையும் நான் நரிகளுக்கு மத்தியில் அதாவது அநீதியாளர்களுக்கு மத்தியில் கழித்துள்ளேன். அஹ்மதியத்திற்கு வந்த பிறகுதான், அன்பை பரப்புவதே இஸ்லாத்தின் அசல் போதனையே தவிர, மக்களிடம் வெறுப்பை பரப்புவது அல்ல என்பதை நான் அறிந்து கொண்டேன்.

பின்னர் ஒருநாள், ஃபஜ்ர் தொழுகை தர்ஸுக்குப் பிறகு அன்னார் எழுந்து நின்றுவிட்டார்கள். மேலும், அனைத்து சகோதரர்களையும் நோக்கி கூறினார்: இந்த மஸ்ஜிதை மக்களால் நிரப்புவது முரப்பியின் பணி மட்டுமல்ல. மாறாக, நம் அனைவரின் பொறுப்பாகும். அனைவருக்கும் நாம் தப்லீக் செய்ய வேண்டும்.

ஆஸ்திரேலியாவின் ஈஸா கேப்ரீ (Esaw Gebre) என்ற ஒரு புதிய அஹ்மதி இருக்கின்றார். அவர் முதலில் பைஅத் செய்திருந்தார். ஆனால், அஹ்மதி அல்லாதவர்களின் ஆட்சேபனைகளால் சிறிது தாக்கத்திற்கும் ஆளாகியிருந்தார். குறிப்பாக, ஜல்ஸா என்பது பித்அத் (சடங்கு) ஆகும் என்ற ஆட்சேபனையின் தாக்கம் அவருக்கு இருந்தது.

அவர் ஆஸ்திரேலியாவில், மஸ்ஜித் பைத்துல் மஸ்ரூரில் உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கூறினார்: எனது அனைத்து சந்தேகங்களும், ஐயங்களும் நீங்கிவிட்டன. ஏனென்றால், இந்த ஜல்ஸா அல்லாஹ்விற்கான ஜல்ஸா என்பது எனக்கு கண்கூடாக தெரிகிறது. இந்த ஜல்ஸா எனது ஈமானை புதுப்பித்துக் கொள்வதற்கான சந்தர்ப்பமாக இருந்தது. எனது துஆ நிச்சயம் ஒப்புக் கொள்ளப்படும் என்று காலத்தின் கலீஃபாவுடன் உலகளாவிய பைஅத்தில் கலந்து கொண்டதால் எனக்கு நம்பிக்கை வந்து விட்டது.

ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளைப் பார்த்து மக்களுக்கு ஈமானில் உறுதி உருவாகின்றது. ஆஸ்திரேலியாவின் மிக்யாஸ் கேப்ரி (Mikias Gebre) என்ற ஒரு புதிய அஹ்மதி சகோதரர் கூறுகின்றார்: உலகளாவிய பைஅத் (நிகழ்ச்சி) எனக்கு ஆச்சரியம் அளிக்கக் கூடிய அனுபவமாக இருந்தது. அந்தநேரத்தில் நான் கடந்த ஆன்மீக நிலைமையை அதற்கு முன் ஒருபோதும் உணர்ந்திருக்கவில்லை. அது எப்படிபட்ட ஓர் ஆன்மீக சூழலாக இருந்தது என்றால், அது எனது உள்ளத்திற்கு அமைதியையும், ஆன்மீக மகிழ்ச்சியையும் வழங்கியது.

லைஸ்தோ நாட்டிலிருந்து யூசுஃப் லாபிய்ஸா என்ற ஒரு புதிய அஹ்மதி கூறுகின்றார்: இது எனது முதல் ஜல்ஸா ஆகும். நான் முதன் முறையாக காலத்தின் கலீஃபாவைக் கண்டுள்ளேன். சமூகத்தின் பலவீனங்கள் மற்றும் தீமைகள் தொடர்பான இஸ்லாத்தின் உயர்தரமான போதனைகளையும், அந்த போதனைகள் மூலமாக சீர்திருத்தம் செய்வதற்கு அன்னார் எடுத்துரைத்த வழிமுறைகளையும் இன்று வரை நான் வேறெங்கும் கேட்கவில்லை. கிறித்தவ மார்க்கத்திலிருந்தும் நான் அதனை கற்றிருக்கவில்லை.

நான் அஹ்மதிய்யத்தைப் பற்றி ஆய்வு செய்துவந்தபோது, முதல் முறையாக காலத்தின் கலீஃபாவின் நிழற்படத்தைப் பார்த்தபோது, அந்தநேரத்தில் அல்லாஹ் என்னிடம் கனவில், இது உண்மையான மார்க்கமாகும் என்று கூறினான்.

நான் அஹ்மதிய்யத்தின் பக்கம் வந்ததும், உண்மையான இஸ்லாத்தை அடைந்ததும் உள்ளபடியே காலத்தின் கலீஃபாவை பார்த்த பிறகு, அல்லாஹ்வின் புறமிருந்து எனக்கு கிடைத்த வழிகாட்டலே ஆகும். இவ்வாறு வாழ்க்கையில், முதல் முறையாக ஜல்ஸாவைப் பார்ப்பதும், ஆன்மாவிற்கு இதமளிக்கும் பைஅத் நிகழ்ச்சியை பார்ப்பதும், அதில் நான் கலந்து கொண்ட பிறகு நான் என்னுள் ஒரு புதிய மாற்றத்தை உணர்வதும் ஒரு புதிய வாழ்க்கை கிடைத்துவிட்டதைப் போன்று உள்ளது.

அல்பானியாவின் பல்லூம்ப் பேஜா (Pellumb Beja) என்ற சகோதரர் ஜெர்மனியில் வரலாற்று ஆசிரியராக உள்ளார். அவர் மூன்று, நான்கு வருடங்களுக்கு முன்னால் பைஅத் செய்திருந்தார்.அவர் கூறுகின்றார்:

இந்த வருடம் யூகே ஆண்டு மாநாட்டில் மெய் நிகர் (virtually) பங்குபெறுதலாக இருந்தது. ஆனால், நான் நேரடியாக கலந்து கொள்வது போன்றே எனக்கு தோன்றியது. ஜல்ஸாவின் சூழல் மற்றும் காலத்தின் கலீஃபாவின் சொற்பொழிவின் தாக்கமும் எந்த அளவிற்கு வலிமையானதாக இருந்தது என்றால், நானும் பௌதீகமாக (நேரடியாக) ஜல்ஸாவில் கலந்து கொண்டுள்ளேன் என்றே தோன்றியது.

ஜமாஅத் ஒன்றுபட்டுள்ளது என்பதற்கு உலகளாவிய பைஅத் தெளிவான சான்றாக உள்ளது. முழு உலக அஹ்மதிகளும் காலத்தின் கலீஃபாவின் கரத்தில் ஒன்றுகூடியுள்ளனர். அனைத்து அஹ்மதி சகோதரர்களும் தங்களது கடமைகளை புரிய விரும்புகின்றனர்.

தொடர்ந்து அவர் கூறுகின்றார்: அனைத்து மக்களும், காலத்தின் கலீஃபாவின் வழிகாட்டல்களை கேட்பதற்கு எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். அதன்படி செயல்படுவதற்கு விருப்பம் கொண்டுள்ளனர். தாங்கள் தங்களது நிறைவுரையில் மிக எளிய

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

சாதாரண வார்த்தைகளில் எங்களுக்கு மிகத் தெளிவான வழிகாட்டல்களை வழங்கியுள்ளீர்கள். அந்த சொற்களை சமூகத்தின் எல்லா தரப்பும் மிக எளிதாக புரிந்து கொள்ள முடியும். அந்த சொற்பொழிவு எங்களை எங்களின் பொறுப்புகளின் முன்னால் நிறுத்தியுள்ளது. குறிப்பாக, பெண்களுக்கான உரிமைகளின் விவகாரங்களில் ஏராளமான சிக்கல்கள் உள்ள அல்பானியன் சமூகத்தில் வசிக்கும் எங்களுக்கு எங்களின் பொறுப்புகளை உணர்த்தியுள்ளது.

அடுத்து, நைஜீர் ரீஜன் பகுதியின் குடான் ரோம்ஜி (Guidan Roumji) இடத்தைச் சார்ந்த ஒரு பெண்மணி கூறுகின்றார்: இன்று லெஜ்னா சகோதரிகளுக்கான சொற்பொழிவைக் கேட்ட பிறகு, பெண்களின் உரிமைகள் மற்றும் பெண்களின் பொறுப்புகள் தொடர்பான உண்மையான ஞானம் எனக்கு கிடைத்துவிட்டது. அந்தப் பெண்மணி தொடர்ந்து கூறுகின்றார்: ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் எவ்வாறு தமது பிள்ளைகளை கருத்தில் கொண்டிருந்தார்கள்? மேலும் அவர்களுக்கு முன்மாதிரியான தர்பிய்யத் வழங்கினார்கள்? என்பதை தாங்கள் கூறியபோது, எனது பிள்ளைகள் முன்மாதிரியான மார்க்கத் தொண்டர்களாக ஆகுவதற்கு இன்று முதல் நானும் எனது பிள்ளைகளின் தர்பிய்யத்தின் பக்கம் சிறப்பு கவனம் செலுத்துவேன் என்று நான் அப்போதே உறுதிமொழி எடுத்துக் கொண்டேன்.

அல்லாஹ் எவ்வாறு மாற்றங்களை உருவாக்குகின்றான்? என்று பாருங்கள்!

ஆதிஃப் ஸாஹித் சாஹிப் அடிலைட் ஜமாஅத்தின் முரப்பி ஆவார். அவர் எழுதுகின்றார்:

அடிலைட்டின் நேரத்திலிருந்து லண்டன் நேரத்திற்கு 8.30 மணிநேரம் வித்தியாசம் உள்ளது. ஜல்ஸாவின் அனைத்து நிகழ்ச்சிகளும், இரவில் தாமதமாகவே ஒளிபரப்பாக இருந்தது. மக்கள் வரமாட்டார்களோ? வருகை சிறப்பாக இருக்காதோ? என்ற ஐயம் இருந்தது. ஆனால், மக்கள் அசாதாரண தூய்மையை வெளிப்படுத்தினார்கள். ஜுமுஆ வேலைநாளாக (working day) இருந்தபோதிலும், மஸ்ஜிதிற்கு மக்கள் வருகை தந்தனர். சொற்பொழிவைக் கேட்டனர். உலகளாவிய பைஅத்தின்போதும் மக்கள் திரண்டிருந்தனர். இரவு மூன்று மணி வரை கண்விழித்திருந்து நிறைவுரையை அவர்கள் கேட்டனர். கிலாஃபத்தின் மீது அனைவருக்கும் இருந்த அன்பு காணக்கூடியதாக இருந்தது. இந்த விஷயத்திற்காக Mta-விற்கும் நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

கஸக்கிஸ்தானிலிருந்து குல்யான் ஆயி மகிய்னா சாஹிபா கூறுகின்றார்கள்: இறைவனின் அருளால் ஜல்ஸா சாலானா நடந்துமுடிந்துவிட்டது. பல்வேறு தலைப்புகளில் காலத்தின் கலீஃபாவும், ஏனைய சொற்பொழிவாளர்களும் ஆற்றிய சொற்பொழிவுகள் மிகவும் பயனுள்ளதாகவும், சிறப்பாகவும் இருந்தன. இந்த சொற்பொழிவுகள் எனது உள்ளத்தில் ஒரு சிறப்பான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. மேலும், நான் தப்லீக் செய்வதற்கான வழிமுறையைக் கற்றுக் கொண்டேன். ஏனைய பார்வையாளர்களுக்கும் அவர்களின் கேள்விகளுக்கான பதில்கள் கிடைத்திருக்கும் என்றும் நான் நம்புகிறேன். அதேபோன்று, அல்லாஹ் எனக்கு பைஅத்தை புதுப்பித்துக் கொள்வதற்கான நற்பேறு வழங்கினான். அல்லாஹ் மக்களின் உள்ளத்தையும், கண்களையும் திறப்பானாக. அவர்கள் நேர்வழியை ஒப்புக் கொள்பவர்களாக ஆகட்டுமாக. (ஆமீன்)

ஏமனிலிருந்து ஷீமா சாஹிபா கூறுகின்றார்கள்: நாங்கள் ஜல்ஸா நிகழ்ச்சிகளைக் கண்டோம். நாங்கள் சொர்க்கத்தில் இருப்பதுபோன்று உணர்ந்து வந்தோம். இஸ்லாமிய சூரியன் எங்கள் மீது மீண்டும் உதயமாகி உள்ளான். எங்களது உள்ளத்திற்கும், ஆன்மாவிற்கும் புத்துயிர் ஊட்டப்பட்டுள்ளது. எங்களிடம் உண்மையான ஈமான், நேசம், ஒற்றுமை மற்றும் ஒழுக்கத்திற்கான ஆன்மா ஊதப்பட்டுள்ளது. நாங்கள் உங்களிடமிருந்து தொலைவில் இருந்தோம். ஆனால், எங்கள் இதயம் உங்களுடன் இருந்தது. நாம் ஒரே வீட்டிலேயே இருந்தோம். ஓர் அஹ்மதியைத் தவிர வேறு எவராலும் இந்தத் தொடர்பை உணர முடியாது. எங்களது நாட்டில் தொடர் மழையாக இருந்தபோதிலும் ஜல்ஸாவின் மூன்று நாட்களில் காலநிலை நன்றாக இருந்தது. **மேலும், அல்லாஹ்வின் அருளால் நாங்கள் ஜல்ஸாவின் அனைத்து நிகழ்ச்சிகளையும் கண்டோம். கண்ணியத்திற்குரிய எஜமானனான இறைவன் கிலாஃபத்தை நிரந்தரமாக நிலைபெறச் செய்வானாக. அது இல்லாமல், எங்களது இருப்பும் இல்லை. எந்த நோக்கமும் இல்லை.**

அடுத்து, கபாபீரிலிருந்து, ஓர் அரபுப் பெண்மணி துஆ சாஹிபா இருக்கின்றார். அவர் கூறுகின்றார்:

தங்களுடைய சொற்பொழிவிலிருந்து குறிப்புகளை எழுத நான் முயன்று வந்தேன். நிறைவுரையில் தாங்கள் பெண்களுக்கான உரிமைகளைப் பற்றி கவனமூட்டியிருந்தீர்கள். அதற்கு, நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எனது உரிமைகளையும், எனது உணர்வுகளையும் பாதுகாக்கின்ற மார்க்கத்தை நான் பின்பற்றுபவள் ஆவேன். இந்த அனைத்து விஷயங்களையும் எனது முஸ்லிம் அல்லாத தோழிகளுக்கு எடுத்துக் கூறுவதில் நான் பெருமிதத்தை உணர்கிறேன். பின்னர், பெண்கள் ஆண்களுக்கு செலுத்தவேண்டிய உரிமைகளை பற்றி எங்களுக்கு எடுத்துக் கூறினீர்கள். அதிலிருந்து, நான் எனது தந்தை, சகோதரர்கள் மற்றும் கணவருக்குரிய உரிமைகளை நல்ல முறையில் வழங்குகின்றேனா? இல்லையா? என்பதை என்னால் அனுமானிக்க முடிந்தது. **நாங்கள் உண்மையில் காலத்தின் கலீஃபாவுடன் இருக்கின்றோம். நமக்கிடையில் எந்த நாடும் இல்லை. எந்த கடலும் இல்லை என்ற உணர்வு பைஅத் நேரத்தில் எனக்கு ஏற்பட்டது. எனது இதயம் வெடித்துவிடும் என்றே எனக்கு தோன்றியது. அந்த அளவிற்கு நான் மகிழ்ச்சியை உணர்ந்து கொண்டிருந்தேன்.**

உர்தன் நாட்டிலிருந்து அமத்துஷ் ஷாஃபி சாஹிபா என்ற ஒரு பெண்மணி இவ்வாறு எழுதுகின்றார்:

நான் ஆண்டு மாநாட்டின் முதல் நாள் சொற்பொழிவைக் கேட்டேன். எனது உடல் எனது பொறுப்புகளின் மீதான உணர்வால் நடுநடுங்கிவிட்டது. இரண்டாவது நாள் நிகழ்ச்சியில் வகான்தா ஊரைச் சார்ந்த அஹ்மதிகளுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் காலத்தின் கலீஃபாவின் மீது இருந்த அன்பைக் கண்டேன். அந்த ஊர் மிகவும் பின்தங்கிய ஊர் ஆகும். அந்த ஊர்வாசிகள் இன்னும் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளிலிருந்து இழப்பிற்குரியவர்களாக உள்ளனர். அவ்வாறிருந்தும், அந்த ஊர்த் தலைவர் ஒருவரின் பேச்சைக் கேட்டு எனது கண்களிலிருந்து கண்ணீர் வந்துவிட்டது. அவர் இவ்வாறு கூறிக் கொண்டிருந்தார்:

அதாவது, நான் அல்லாஹ்வின் மீதும், அவனது தூதர் (ஸல்) மீதும், மஸீஹ் மவ்வூது (அலை) மீதும் அன்பு கொண்டுள்ளேன். இது வெளிப்படையில் மிக சாதரணச் சொற்களாகும். ஆனால், அவை எனது உள்ளத்தில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது.

அடுத்து, எகிப்தின் முரவ்வா அப்துல்லாஹ் சாஹிபா இருக்கின்றார்கள். அந்தப் பெண்மணி கூறுகின்றார்:

அமீருல் முஃமினீன்! தாங்கள் எங்களது உள்ளங்களை தங்களது சொற்பொழிவாலும், ஏனைய சொற்பொழிவாளர்களின் சொற்பொழிவுகளாலும், ஆன்மீக செல்வங்களால் நிறைத்துவிட்டீர்கள். நான் ஜல்ஸாவின் நாட்களில் ஆன்மீக வானத்தில் பறந்து கொண்டிருந்தேன். மேலும், எனது இறைவனை சந்திப்பதற்கு நான் நிம்மதியிழந்திருந்தேன். தாங்கள் குறிப்பிட்ட சாந்தியடைந்த ஆன்மா எனும் அந்தஸ்தை அடைய வேண்டும் என்பது எனது விருப்பமாகும். இறைவனின் நேசத்திலும்,

அவனை அடையவேண்டும் என்ற ஆர்வத்திலும் சுற்றத்தை மறந்துவிடும் அளவில் நான் மெய்மறந்துவிடவேண்டும். மேலும், எனது உடல் நிச்சயமாக மக்களுக்கு முன்னால் இருக்கட்டும். ஆனால், எனது ஆன்மா இறைவன் மற்றும் அவனது தூதுர் (ஸல்) அவர்களின் நேசத்தின் வானத்தில் சிறகடித்துக் கொண்டிருக்கவேண்டும் என உள்ளம் விரும்புகின்றது.

அரபேயிர்களிடத்தில் ஒரு சிறப்புப் பண்பு உள்ளது. சொற்களை மிகவும் நல்ல முறையில் பயன்படுத்துகின்றனர். கலப்பற்றத் தன்மையையும், நன்றியுணர்வையும் அவர்களுக்கு நல்ல முறையில் வெளிப்படுத்த தெரியும். அல்லாஹ் அவர்களின் ஈமானிலும், உறுதியிலும் முன்னேற்றத்தை வழங்குவானாக.

அடுத்து, மலேசியாவைச் சார்ந்த நஸ்லான் அழ்கன் (Nazlan Azganஎன்ற ஒரு புதிய அஹ்மதி சகோதரர் இருக்கின்றார்.மிகவும் எளிய மனிதர் ஆவார். மிகவும் எளிமையாக வாழ்க்கையை கழிப்பவர் ஆவார். பொருளாதார நிலைமையும் சிறந்ததாக இல்லை. அவரிடம் இன்டர்நெட்டில் ஜல்ஸா பார்ப்பதற்கு எந்தத் தொகையும் இருக்கவில்லை. அவர் தமது வீட்டின் முன்னால் இருந்த ஒரு மரத்திலிருந்து மாங்கனிகளை பறித்தார். மேலும் அந்த மாங்கனிகளை விற்பனை செய்தார். மேலும் அவர் கூறுகின்றார்: அங்கு சென்று விற்பனை செய்து கிடைத்த பணத்தில் அவர் இன்டர்நெட் டேட்டா (Data) வாங்கிக் கொண்டார். பின்னர் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளைக் கண்டார்.

கினிபஸாவ் நாட்டின் ஆஸினீ பால்டே சாஹிப் என்ற அஹ்மதி அல்லாத நண்பர் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளைக் கேட்டார். அவர் கூறுகின்றார்: தமது தலைவரின் பேச்சை இவ்வளவு அன்புடனும், மரியாதையுடனும் மக்கள் கேட்கும் இதுபோன்ற நிகழ்ச்சிகளைக் நான் இன்றுவரை ஒருபோதும் கண்டதில்லை. உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியின் காட்சி மிகவும் அழகானதாக இருந்தது.

அவர் உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியின் காட்சியைக் கண்டிருந்தார். அதில் ஜமாஅத் ஒரு கரத்தில் ஒன்றிணைந்திருந்தது.

அவர் கூறுகின்றார்: அஹ்மதிய்யா ஜமாஅத் தனது கலீஃபாவிற்கு முழுமையாக கட்டுப்படுகிறது. மேலும் இதுவே அவர்களின் வெற்றியின் இரகசியம் ஆகும். மேலும் உண்மையில் அஹ்மதிய்யா ஜமாஅத் ஓர் உண்மையான ஜமாஅத் ஆகும். நீங்கள் அனைவரும் உண்மையான வழியில் இருக்கின்றீர்கள் என்ற உறுதி அந்தக் காட்சியைக் கண்ட பிறகு எனக்கு ஏற்பட்டுவிட்டது.

மெக்சிகோவிலிருந்து சுரய்யா கோமீஸ் (Gomez) சாஹிபா கூறுகின்றார்: யூகே ஜல்ஸாவின் சொற்பொழிவுகளை கேட்பதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தது. நிறைவுரை மிகவும் சிறப்பானதாக இருந்தது. அதில் பெண்களின் உரிமைகள் தொடர்பாகவும், மேலும் குடும்ப சூழலை எவ்வாறு அழகானதாக ஆக்கிக் கொள்ள முடியும்? என்பது தொடர்பாகவும் கூறப்பட்டிருந்தது. இவை எப்படிபட்ட இஸ்லாமியப் போதனைகள் என்றால் நான் சுயமே எனது வாழ்க்கையில் அமல் செய்வதற்கு முயற்சி செய்வேன். அதுமட்டுமின்றி, பைஅத் சந்தர்ப்பத்தில் மிகவும் உணர்ச்சிவயப்பட்டுவிட்டேன். அது எப்படிபட்ட நிலையாக இருந்ததென்றால், அதனை நான் வார்த்தைகளில் எடுத்துரைக்க முடியாது. ஆனால், நான் மிகவும் மகிழ்ச்சியையும், அமைதியையும் உணர்ந்து கொண்டிருந்தேன்.

கினி பஸாவ் நாட்டின் ஒரு புதிய அஹ்மதி இருக்கின்றார். அவர் தனது அஹ்மதி அல்லாத ஸைனபுன் நிஸா என்ற பெண்மணியை அழைத்துக் கொண்டு ஜல்ஸாவிற்கு வந்திருந்தார். அவர் கூறுகின்றார்: ஜல்ஸாவின் மூன்று நாட்களின் அனைத்து நிகழ்ச்சிகளையும் குறிப்பாக, தங்களுடைய அனைத்து சொற்பொழிவுகளையும் கேட்டார். மேலும், கடைசி நாளில் மஸ்ஜிதில் அஹ்மதி அல்லாத பெண்மணி இவ்வாறு அறிவித்தார்:

எனக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தைக் குறித்து நிறைய ஆட்சேபனைகள் இருந்தன. ஆனால், தங்களுடைய சொற்பொழிவுகளை கேட்ட பிறகு, அனைத்து ஆட்சேபனைகளும் நீங்கிவிட்டன. மேலும், நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைவதாக அறிவிக்கின்றேன். மேலும், நான் எனது மகனையும் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்காக அர்ப்பணிக்கின்றேன்.

கினிபஸாவ் நாட்டின் ஒரு கிராமத்தில் வசிக்கக் கூடிய பெண்மணி கம்பா கீய்டா சாஹிபா ஆவார். அவர் யூகே ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருந்தார். உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியைப் பற்றிக் கேட்டபோது முஅல்லிம் சாஹிபிடம் விளக்கத்தை கேட்டார். முஅல்லிம் சாஹிப் பத்து பைஅத் நிபந்தனைகளைப் பற்றி அவருக்கு கூறினார்கள். எனவே, அந்தப் பெண்மணியும் பைஅத்தின் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டுவிட்டார். பைஅத்தின் அனைத்து சொற்களையும் கூறினார். மேலும், நிறைவுரையையும் கேட்டார். கடைசியில் இவ்வாறு கூறினார்:

நான் உலகளாவிய பைஅத் நடந்த அதே தருணத்தில்தான் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டேன். ஆனால், இந்த நிறைவுரைக்குப் பிறகு நான் இவ்வாறு அறிவிப்பு செய்ய விரும்புகிறேன். அதாவது, இன்று உம்மத்தே முஹம்மதிய்யாவை (அதாவது முஹம்மதிய்ய சமுதாயத்தை) காப்பாற்ற முடியுமென்றால் அது அஹ்மதிய்யா கிலாஃபத்தால் மட்டுமே முடியும். மேலும், நான் இன்று அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைவதற்கான அறிவிப்பை செய்கின்றேன். மேலும், எனது அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்ளும்படி பிள்ளைகளுக்கு அறிவுரை செய்வேன். ஏனெனில் அஹ்மதிய்யத்தான் உண்மையான இஸ்லாம் ஆகும்.

அடுத்து, கோன்கோ, பிரேசிலின் பல்வேறு ஜமாஅத்துகளின் முபெல்லிக்கள் எழுதுகின்றனர்:

ஜமாஅத் அளவில் ஜல்ஸாவின் அனைத்து நிகழ்ச்சிகளையும் MTA ஆஃப்ரிக்கா மூலமாக நேரடியாக பார்ப்பதற்கு நற்பேறு கிடைத்தது. அதில் ஆற்றப்பட்ட சொற்பொழிவுகளால் ஏராளமான மக்கள் தாக்கத்திற்குள்ளாகினர். மேலும், அல்லாஹ்வின் அருளாலும், அந்த சொற்பொழிவுகளைக் கேட்ட காரணத்தாலும், ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளைக் கண்டதாலும், 23 நபர்களுக்கு அந்த நாட்களில் பைஅத் செய்வதற்கு நற்பேறு கிடைத்துள்ளது.

கான்கோ பிரேசிலிலிருந்து மிஸ்டர் மபூரா பின் ஜீய்லி (Mboura Ben Jeli) என்ற கிறித்தவ மார்க்கத்தைச் சார்ந்த நண்பர் ஒருவர் ஜல்ஸாவிற்கு அழைக்கப்பட்டிருந்தார். இரண்டு நாட்கள் அவர் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளைக் கேட்டார். அவர் கூறுகின்றார்: நான் இங்கு இரண்டு நாட்களாக அல்லாஹ்விற்குரிய உரிமைகள், அடியார்களுக்குரிய உரிமைகள், தக்வா, மற்றும் இஸ்திக்ஃபார் தொடர்பாக விஷயங்களை கேட்டுக் கொண்டிருந்தேன். அவை எனது உள்ளத்தில் குடிகொண்டுவிட்டன. மேலும் நான் என்னுள் ஒரு மாற்றத்தை உணர்ந்து கொண்டிருக்கின்றேன். ஆனால், இதற்கு நேர்மாற்றமாக தேவாலயங்களில் மந்திரவித்தைகளை காட்டுவது, பிசாசுகளை விரட்டுவது போன்ற வேலைகளைத் தவிர வேறு எதுவும் கூறப்படுவதில்லை. நான் தங்களின் ஜமாஅத்தில் இணைந்துவிடவேண்டும் என தீர்மானித்துவிட்டேன். ஏனெனில், எனக்கு இங்கேதான் ஆன்மீக அமைதியும், சுகமும் கிடைத்துள்ளது.

இவ்வாறு அவர் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்துவிட்டார்.

பர்கினோஃபாஸ் நாட்டிலிருந்து நேஸே பீஸா (Gnisse Bessa) என்ற புதிய முஸ்லிம் நண்பர் ஒருவர் கூறுகின்றார்: கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை நேரடியாக பார்ப்பது இது எனது முதல் அனுபவம் ஆகும். நான் இஸ்லாத்தில் புதிதாக நுழைந்துள்ளேன். உலகம் கண்டிப்பாக ஒரு தலைவரின் கரத்தில் ஒன்றுபட வேண்டுமே! என்ற கேள்வி எனது எண்ணத்தில் எப்போதும் இருந்து வந்தது. தற்போது, நான்

இங்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மக்களைக் கண்டேன். எனக்கு அந்த ஒருமைப்பாடு தென்படுகிறது. எனவே நான் அவர்களுடன் அஹ்மதிய்யா பள்ளிவாயிலில் தொழ ஆரம்பித்துவிட்டேன். மேலும், நான் இன்று யூகே ஜல்ஸாவிலும் கலந்து கொண்டுள்ளேன். அதில் அனைத்து அஹ்மதிகளும் MTA மூலமாக கலந்து கொண்டுள்ளனர். நான் இவை அனைத்தையும் எனது கண்களால் கண்டபிறகு நான் நிம்மதியடைந்துவிட்டேன். அனைவரும் ஒரு தலைமையின் கீழ் ஒன்றுபடவேண்டும் என நான் எப்போதும் சிந்தித்து வந்த அந்த விஷயத்தை நான் பார்த்துவிட்டேன். எனது அந்தக் கேள்விக்கு விடை கிடைத்துவிட்டது. எனவே, இன்றிலிருந்து நான் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்வதாக அறிவிக்கின்றேன். மேலும் நான் எனது குடும்பத்தினரையும் கிலாஃபத்திற்கு பின்னால் அணி திரளும்படி கூறுவேன்.

அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்ட நிகழ்வு தொடர்பாக இலங்கையின் ஜமாஅத் சத்ர் சாஹிப் எழுதுகின்றார்கள்:

உள்ளூர் ஜமாஅத்துகளில் ஜமாஅத் அளவில் ஜல்ஸா கேட்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கொழும்புவில் ஜமாஅத் சென்டர்களில் நாட்டின் நிலைமைகளை கருத்தில் கொண்டு போக்குவரத்து மிகவும் கடினமாக இருந்தபோதிலும், ஐம்பது அஹ்மதிகளும், அஹ்மதி அல்லாத நபர்களும் ஜல்ஸாவிலும், உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டிருந்தனர். இந்த சந்தர்ப்பத்தில் மக்கள் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தனர். அதேபோன்று, லைவ் ஸ்டிரீமிங் மூலமாக நீர்கொழும்பு, பஸ்யாலா, பவலவனர்வா ஆகிய இடங்களில் ஜமாஅத் உறுப்பினர்கள் ஒட்டுமொத்த அளவில் ஜல்ஸாவில் கலந்து கொண்டிருந்தனர். மேலும் அனைத்து நிகழ்ச்சிகளும் தமிழ் மொழியில் மொழியாக்கமும் செய்யப்பட்டன. **இந்த நிகழ்ச்சிகளின் விளைவாக நான்கு நபர்கள் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்வதற்கு நற்பேறு பெற்றார்கள்.**

அல்பானியா தொடர்பான அறிக்கை உள்ளது. அங்கு நிகழ்ச்சிகளின் நேரடி மொழியாக்கம் யூடியூப்பில் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. அல்பானியா, கோஸவ், மக்தூவனியா, ஜெர்மனி போன்ற மொழிகளில் மக்கள் கேட்டுக் கொண்டிருந்தனர். ஆல்பர்ட் (Albert) என்ற தப்லீக்கின் கீழ் இருக்கும் ஒரு புதிய முஸ்லிமான அல்பானியன் நண்பர் முதல் முறையாக யூகே ஜல்ஸாவில் நிறைவு அமர்வில் கலந்து கொண்டிருந்தார். ஜல்ஸா முடிந்த பிறகு கூறினார்:

கலீஃபத்துல் மஸீஹின் சொற்பொழிவு திருக்குர்ஆன் வசனங்கள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை மற்றும் அறிவுப்பூர்வமான சான்றுகளால் நிறைந்திருந்தது. ஆனால், மிகவும் எளிய வார்த்தைகளில் இருந்தது. பெண்களின் உரிமைகள் தொடர்பாக ஆட்சேபனை செய்பவர்களின் அனைத்து கேள்விகளுக்கும் அன்னார் தமது சொற்பொழிவில் பதில்களையும் வழங்கிவிட்டார்கள்.

அவர் தமது வீட்டிற்கு திரும்பி சென்ற சிறிது நேரத்திலேயே மீண்டும் அவரின் தொலைபேசி அழைப்பு வந்தது. மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத் மற்றும் ஜல்ஸாவைப் பற்றி தமது உணர்வுகளை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். கூறினார்: அஹ்மதிய்யா ஜமாஅத்துதான் உண்மையான இஸ்லாம் ஆகும். பைஅத் நிபந்தனைகளைப் பற்றி பேசப்பட்டபோது, ஜமாஅத்தின் ஒரு அல்பானியன் நூலை ஆதாரமாகக் கொடுத்தவாறு அவர் கூறினார்: இதில் பத்து பைஅத் நிபந்தனைகள் இடம்பெற்றுள்ளன.நான் இதனை படித்துவிட்டேன். தற்போது நான் பைஅத் செய்வதற்கு தயாராக உள்ளேன்.

ஆக, அவர் ஜமாஅத்தில் இணைந்துவிட்டார்.

கோன்கோ பிரேசிலின் முஅல்லிம் சாஹிப் எழுதுகின்றார்; பையூகூ ஸ்டீவீ என்ற பெண்மணியின் கணவர் ஏற்கனவே அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டிருந்தார். மனைவியும் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டுவிடவேண்டும் என்பது அவரது விருப்பமாக இருந்தது. தப்லீக்கும் செய்து கொண்டிருந்தார். துஆவும் செய்து வந்தார். ஆனால், அவரது மனைவி தேவாலயத்தை விடுவதற்கு தயாராக இல்லை. ஆண்டு மாநாட்டைப் பார்ப்பதற்கு அழைப்பு கொடுக்கப்பட்டிருந்தது. மூன்று நாட்களும் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளை அவர் பார்த்தார். மேலும், ஜல்ஸாவின் கடைசி நாளன்று அந்தப் பெண்மணி கூறினார்: மூன்று நாட்களாக பாதிரி மற்றும் தங்களுடைய கலீஃபாவின் விஷயங்களை நான் ஒப்பிட்டு பார்த்து வந்தேன். தங்களின் கலீஃபாவின் கூற்றுகளில் எடை இருக்கிறது என்ற முடிவிற்கு நான் வந்துள்ளேன். மேலும் எல்லா விஷயங்களும் உள்ளத்தில் இறங்கிக் கொண்டிருந்தன. அதேநேரம், பாதிரியின் கூற்றை பொறுத்தவரை, அந்த பேச்சுகளை நாங்கள் தினமும் கேட்டு வருகின்றோம். ஆனால், ஒருபோதும் அவரது பேச்சு எங்கள் இதயத்திலி தாக்கத்தை ஏற்படுத்தியதை நாங்கள் உணரவில்லை.

ஆக, பைஅத் செய்து ஜமாஅத்தில் அவர் இணைந்துவிட்டார்.

இவை நான் எடுத்துரைத்த மக்களின் சில சம்பவங்கள் ஆகும்.

முக்கியத் தலைவர்கள் சார்பாக ஏராளமான தூதுச் செய்திகள் வந்தன என்பதை நீங்கள் அனைவரும் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளுக்கிடையே கண்டீர்கள். உலகம் முழுவதும் பல்வேறு அரசியல்வாதிகளிடமிருந்தும், தலைவர்களிடமிருந்தும் 126 தூதுச் செய்திகள் கிடைத்துள்ளன. அவற்றில் 101 வீடியோக்களும், 25 தூதுச் செய்தி கடிதங்களும் மூலமாகவும் இருந்தன. அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் தூதுச் செய்திகளும் கிடைத்தன. யூகே மட்டுமின்றி, மற்ற நாடுகளிலிருந்தும் தூதுச் செய்திகளை மக்கள் அனுப்பினர். அமெரிக்கா, கனடா, சீராலியோன், உகண்டா, லைபீரியா, நியூசிலாந்து, ஸ்பெயின், ஹாலந்து போன்ற நாடுகளும் அவற்றில் அடங்கும். லைவ் ஸ்டிரீமிற்கான ஏற்பாடு 53 நாடுகளில் செய்யப்பட்டிருந்தன. அதன் மூலம் 53 நாடுகளின் மக்கள் யூகே ஜல்ஸாவில் கலந்துகொண்டிருந்தனர். மேலும், ஐரோப்பாவிலும், ஆஃப்ரிக்காவிலும், ஆசியாவிலும் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மேலும் இந்த 53 நாடுகளில் 80 இடங்களில் மக்கள் ஓரிடத்தில் ஒன்று திரண்டு ஜல்ஸாவில் கலந்து கொண்டனர்.

**ஊடகங்களில் செய்திகள்:** இந்த வருடம் கோவிட் காரணமாக பொதுவான அழைப்பு விடுக்கப்படவில்லை. ஆனால், இரண்டு அவுட் லிஸ்ட் மீடியாக்கள் குறிப்பாக விண்ணப்பித்து கலந்து கொள்வதற்கு அனுமதி பெற்றுக் கொண்டனர். ஆக, அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. நாம் எவ்வாறு ஆண்டு மாநாட்டைக் குறித்து உலகத்திற்கு கூறுவது? இது மிகவும் சவாலான பணியாகும் என்று பிரஸ் செக்ஷன் எண்ணம் கொண்டது. ஆனால், அல்லாஹ் சுயமே ஒளிபரப்பிற்கான ஏற்பாட்டை செய்துவிட்டான். இரண்டு மீடியாக்கள், பிபிஸியும் மற்றொரு சேனல்காரர்களும் வந்திருந்தனர். அதுமட்டுமின்றி, பிபிஸி, ஐடிவி, மெட்ரோ, எல் பி ஸி, ரேடியோ சர்வே, பிபிஸி சவுத் டுடே, பிபிஸி நியூஸ் வெப்சைட், போன்ற ஊடகங்கள் (ஜல்ஸா குறித்து) அதிகமான செய்திகளை வழங்கின. இதேபோன்று மண்டல அளவிலும் லிஸ்ட்அவுட் மீடியாவும் ஜல்ஸா செய்திகளை வழங்கின. இதனைத் தவிர, 28 வெப் சைட்கள் ஜல்ஸா தொடர்பான செய்திகள் அல்லது கட்டுரைகளை வெளியிட்டன. 20மில்லியனுக்கும் கூடுதலான மக்கள் வரை இந்த வெப்சைட்களின் செய்திகள் சென்றடைகின்றன. அச்சு ஊடகங்களை பொறுத்தவரை, செய்தித்தாள்களில் ஜல்ஸா தொடர்பாக 14 கட்டுரைகள் வெளியாகியுள்ளன. மேலும் அந்த செய்தித் தாள்களை படிப்பவர்களின் எண்ணிக்கை 1.2 மில்லியன் ஆகும். பல்வேறு டிவி சேனல்களின் 32 நிகழ்ச்சிகளில் ஜல்ஸா

சாலானா செய்திகள் ஒளிபரப்பாகியுள்ளன. இந்த டிவி சேனல்களை பார்ப்பவர்களின் எண்ணிக்கை 12 மில்லியனை விட கூடுதலாகும். ரேடியா நிலையங்களின் 33 நிகழ்ச்சிகளில் ஆண்டு மாநாட்டைப் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. ஒரு மில்லியனை விட அதிகமான நபர்கள் இந்த ரேடியோக்களை கேட்கின்றனர். சமூக வலைதளங்களின் மூலமாக சில மீடியா அவுட் லிஸ்டகளும், பத்திரிகையாளர்களும், சமூக பிரபலங்களும் ஜல்ஸா தொடர்பான மெசேஜ்களை பதிவிட்டனர். அவர்களின் பதிவுகள் 12 மில்லியன் நபர்கள் வரை சென்றடைகின்றன. பிரஸ் அன்ட் மீடியா டீம் வீடியோக்களை தயாரித்தும் சமூக வலைதளங்களில் பதிவிட்டு வந்தது. அது சுமார் 2லட்சத்து 34ஆயிரத்திற்கும் அதிகமான நபர்கள் வரை சென்று சேர்ந்திருக்கும். இந்த அனைத்து எண்ணிக்கையையும் கூட்டினால் மொத்தம் 57.5மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வரை ஜல்ஸாவின் செய்திகள் சென்றுசேர்ந்துள்ளன.

பத்திரிகையாளர்கள் வருவதற்கு அனுமதி தரப்படவில்லை. மேலும், பிரஸ் மீடியா டீம், யூகே ஜமாஅத்தின் தப்லீக் டிப்பார்ட்மென்டின் ஒத்துழைப்புடன் 32 பத்திரிகையாளர்களுக்கு லங்கரிலிருந்து உணவு அனுப்பப்பட்டது. மேலும், அதற்கும் அவர்கள் மிகவும் நேர்மறையான பதில் கொடுத்தார்கள். மிகவும் appreciate செய்தார்கள். பிபிஸி சவுத்தின் பிரதிநிதியின் பத்திரிகையாளர் எட்வர்ட் சாலட் (Edward Sault) கூறினார்: நான் ஜல்ஸாவில் மிகவும் நல்ல முறையில் நேரத்தைக் கழித்தேன். விருந்து உபசரிப்பு மிகவும் நன்றாக இருந்தது. பல்வேறு தலைப்புகளில் சொற்பொழிவுகளைக் கேட்டது மிகவும் நன்றாக இருந்தது. எதிர்காலத்திலும் உங்களுடன் பணி செய்வேன். பத்திரிகையாளர் TEVY Nitha கூறினார்: உங்களுடைய ஜமாஅத்தின் பரந்த மனப்பான்மையை பார்த்து எனக்கு மிகவும் ஆச்சரியம் ஏற்பட்டுவிட்டது. பத்திரிகையாளர் நதாஷா தேவன் (Nathasaha Devon) கூறினார்: உண்மையில் அனைத்து மார்க்கங்களும் சமமானவை ஆகும். நல்ல மக்கள் மார்க்கத்தை மக்களை ஒன்றுசேர்ப்பதற்காகவும், ஏழைகளுக்கு உதவி செய்வதற்காகவும் பயன்படுத்துகின்றனர். அதேநேரம் தீய மக்கள் மார்க்கத்தை தீய பணிகளுக்காக பயன்படுத்துகின்றனர். ஜல்ஸா சாலானா நிச்சயம் நல்ல மக்களுக்கு உதாரணம் ஆகும்.

MTA சார்பாக ஜல்ஸா சாலானா குறித்த 1885 பதிவுகளும், படங்களும், வீடியோக்களும், சமூக வலைதளங்களில் அப்லோட் செய்யப்பட்டுள்ளன. அதன் மூலம் 4மில்லியன் நபர்கள் வரை அந்த செய்தி சென்று சேர்ந்துள்ளது. 2லட்சத்து 13ஆயிரம் நபர்கள் அந்த பதிவுகளை லைக் செய்துள்ளனர். மேலும், சமூக வலைதளங்களில் அது குறித்து கருத்துகள் பகிரப்பட்டுள்ளன. 1236 வீடியோக்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அதனை 2லட்சத்து 31ஆயிரம் நபர்கள் பார்த்துள்ளனர். பார்வையாளர்களின் மொத்த நேரத்தை கணக்கீடு செய்து பார்த்தால் 4லட்சத்து 70ஆயிரம் மணிநேரம் ஆகின்றன. MTA- வின் வலைதளத்தை 24ஆயிரம் நபர்கள் 92ஆயிரம் முறை பார்த்துள்ளனர்.

MTA ஆஃப்ரிகாவின் அறிக்கை இவ்வாறாகும். அதாவது, 20டிவி சேனல்களில் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகள் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. அவற்றில் சில அரசாங்க சேனல்களும், சில தனியார் சேனல்களும் ஆகும். சில சேனல்கள் நாடு முழுவதும் பார்க்கப்படுகின்றன. இந்த சேனல்களில் கேம்பியா நேஷனல் டிவி, சிராலியோன் நேஷனல் டிவி, லைபீரியாவின் நேஷனல் டிவி, மற்றும் பல்வேறு தனியார் சேனல்களும் அடங்கும். உலகளாவிய பைஅத் நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பப்பட்டன. 20 டிவி சேனல்கள் மூலமாக எனது சொற்பொழிவுகள் ஒளிபரப்பப்பட்டன. 35மில்லியன் மக்கள் வரை சென்றுசேர்ந்துள்ளது.

ஜல்ஸாவின் நேரடி ஒளிபரப்பு தவிர, ஜல்ஸா தொடர்பாக நியூஸ் டீம் தயார் செய்து ஆஃப்ரிகா முழுவதும் அனுப்பி வைக்கப்பட்டன. ஆக, ஜல்ஸாவின் மூன்று நாட்களில் 15சேனல்கள் ஜல்ஸா சாலானா தொடர்பாக செய்திகளை ஒளிபரப்பின. அது 15மில்லியன் மக்கள் வரை சென்றுசேர்ந்துள்ளது.

ரிவியூ ஆஃப் ரிலிஜன் பத்தரிகை மூலமாகவும் போதுமான செய்திகள் வெளியாகியுள்ளன. சமூக வலைதளத்தின் மூலமாக அந்த செய்தி சென்றுசேர்ந்துள்ளது. ஜல்ஸா தொடர்பாக 40கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. 12 வீடியோக்கள் தயாரிக்கப்பட்டன. 110க்கும் அதிகமான பதிவுகள் பதியப்பட்டன. 3லட்சம் மக்கள் வரை ஜல்ஸா செய்தி சென்றடைந்துள்ளது.

எனவே, அல்லாஹ்வின் அருளால் ஜல்ஸாவின் எண்ணற்ற கனிகள் உள்ளன. அதனை அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ளான். வந்தடைந்த சம்பவங்கள் மற்றும் தாக்கங்களில் நான் கூறியதுபோன்று அவற்றிலிருந்து சில உதாரணங்களையே நான் எடுத்துரைத்துள்ளேன். அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியின் ஈமானிலும், உறுதியிலும் முன்னேற்றத்தை வழங்குவானாக. மேலும் ஜல்ஸாவினால் ஏற்பட்ட தாக்கங்களை நிரந்தரமானதாக ஆக்குவானாக. அவை தற்காலிகமானதாக இருக்கக் கூடாது.

தொழுகைக்குப் பிறகு நான் சில ஜனாஸா தொழுகைகளை தொழவைப்பேன். மர்ஹூம்களின் நற்குறிப்பையும் செய்துவிடுகிறேன். முதலாவது நற்குறிப்பு, கனடாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய குத்ரத்துல்லாஹ் அத்னான் சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய நுஸ்ரத் குத்ரத்துல்லாஹ் சுல்தானா சாஹிபா அவர்களுடையது ஆகும். கடந்த நாட்களில், அன்னார் தமது 55-வது வயதில் மரணமடைந்துவிட்டார்கள்.

إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

மர்ஹூமா தொழுகைகளை பேணக்கூடியவராகவும், தஹஜ்ஜுத் தொழக்கூடியவராகவும், ஒரு தூய, வானவரின் பண்பைக் கொண்ட பெண்மணியாகவும் திகழ்ந்தார்கள். மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். அன்னார் தப்லீக் செய்யாமல் விட்டுவிட்ட மருத்துவரே கிடையாது. ஓர் அரேபிய முஸ்லிம் பெண் மருத்துவரும் இருந்தார். அவர் நுஸ்ரத் சாஹிபாவிடம் இருந்து திருக்குர்ஆன் கேட்பதற்காக வந்துசென்றார். மர்ஹூமா அவருக்கு சூரா யாஸீன் ஓதிக்காட்டி வந்தார். எல்லா பேச்சுகளின்போதும் கிலாஃபத்தை பற்றி குறிப்பிடுவார். கிலாஃபத்துடன் மிகவும் நன்றியுணர்வு மிக்க தொடர்பு இருந்தது. அன்னாரின் ஏராளமான உறவினர்கள் அஹ்மதி அல்லாதவர்களாக, சுன்னத் ஜமாஅத்தைச் சார்ந்தவர்களாக உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் தூதுச் செய்தி அனுப்பினார்கள். நீங்களும் காலத்தின் இமாமிடம் பைஅத் செய்யுங்கள் என்று தப்லீக் செய்தார்கள். மர்ஹூமா பின்விட்டுச் சென்றவர்களில் கணவர் மட்டுமின்றி மூன்று பிள்ளைகளும் உள்ளனர்.

மர்ஹூமாவின் கணவர் கூறுகின்றார்: எனது மனைவி ஒரு வாழ்க்கையை அர்ப்பணித்தவரைப் போன்று வாழ்வைக் கழித்தார்கள். பிள்ளைகளுக்கு தர்பிய்யத் வழங்குவதில் தனது அனைத்து ஆற்றல்களையும், முயற்சிகளையும் செலவழித்தார்கள். கிலாஃபத்துடன் மிக அதிகமான அன்பும், பற்றும் இருந்தது. தப்லீக்கில் மிகுந்த ஆர்வம் இருந்தது.

நான் கூறியிருந்ததைப் போன்று அவருக்கு ஆர்வம் இருந்தது.

தமது பிள்ளைகளிடத்திலும் அந்த ஆர்வத்தை உருவாக்கினார். அன்னாரின் பிள்ளைகள் அனைவரிடத்திலும் தப்லீக்கில் ஆர்வம் இருப்பதை நான் கண்டுள்ளேன். அவர்கள் அசாதாரண ஆர்வம் கொண்டுள்ளனர். சாதாரண ஆர்வம் கிடையாது. அல்லாஹ்வின் அருளால் அவர்களின் பிள்ளைகளிடத்தில் ஒரு சிறப்பான தர்பிய்யத் உள்ளது. மேலும்,

அவர்களிடம் படிப்பதற்கான ஆர்வமும் உள்ளது. அல்லாஹ் அவர்களுக்கு திறமையை வழங்கியுள்ளான். அவர்கள் மூலமாகவும் பைஅத்கள் நடைபெற்றுள்ளன. நான் கூறியதுபோன்று அன்னாரின் ஒரு மகன் ரலியல்லாஹ் நுஃமான் ஜாமிஆவிலும் உள்ளார். மிக நன்றாக பணி செய்கின்றார். அல்லாஹ் அவருக்கும், ஏனைய பிள்ளைகளுக்கும் எதிர்காலத்தில் தன்னலமற்றவர்களாக மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்கு நற்பேறு வழங்குவானாக. மேலும், அந்த அனைத்து பிள்ளைகளையும் தமது தாயாரின் துஆக்களுக்கு வாரிசாக்குவானாக.

மர்ஹூமாவின் மூத்த மகன் ஜரியுல்லாஹ் அத்னான் சாஹிப் கூறுகின்றார்: தாயார் மிகவும் நல்ல, இறையச்சம் கொண்ட மற்றும் முன்மாதிரியான பெண்மணியாக இருந்தார்கள். அல்லாஹ்வுடன் அவருக்கு சிறப்பான தொடர்பு இருந்தது. பிள்ளைகளின் தர்பிய்யத்தில் மிகுந்த கவலை இருந்தது. ஒவ்வொரு நொடியும் அல்லாஹ்வின் பக்கம் அன்னாருக்கு பார்வை இருந்தது. அனாதைகளை மிகவும் கருத்தில் கொண்டிருந்தார்கள். குழந்தைப் பருவம் முதலே இறைவன் மீது அன்னாருக்கு உறுதியான ஈமான் இருந்தது. அன்னாருக்கு கேன்சர் நோய் ஏற்பட்டிருந்தது. அந்த நோய் கண்டறியப்பட்ட அந்த நேரத்திலும் அல்லாஹ்வின் திருப்தியில் திருப்தி கொண்டிருந்தார்கள். இன்னும் கூறப்போனால், நீங்கள் பலம் வாய்ந்தவர்களாக இருக்கவேண்டும். அல்லாஹ்வின் மீதான உங்களின் ஈமான் மிக உறுதியானதாக இருக்க வேண்டும் என்று எங்களிடம் கூறிவந்தார்கள். வாழ்வும், மரணமும் ஒன்றும் பெரிய விஷயமில்லை. மாறாக, தன் மீது அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கும் வகையிலும், மேலும் தனது செயல்களில் சுயமே மனிதன் நிம்மதி கொண்டவனாக இருக்கும் வகையிலும் வாழ்வைக் கழிப்பதே அசல் விஷயம் ஆகும்.

அல்லாஹ் அன்னாரின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக.

நான் எடுத்துரைக்கவுள்ள இரண்டாவது ஜனாஸா மற்றும் நற்குறிப்பு மதிப்பிற்குரிய சவுத்ரி லதீஃப் அஹ்மது ஜமட் சாஹிப் அவர்களுடையதாகும். கடந்த நாட்களில், அன்னார் 79-வது வயதில் மரணமடைந்துவிட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அல்லாஹ்வின் அருளால் மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள். அன்னாரின் குடும்பத்தில் அன்னாரின் தந்தை வழிப் பாட்டனார் சவுத்ரி முஹம்மது தீன் சாஹிப் (ரலி) அவர்களின் மூலமாக அஹ்மதிய்யத் தோன்றியது. அந்த சஹாபியின் பெயரை அன்ஜாமே ஆதம் எனும் நூலில் ரூஹானி ஹஸாயின் தொகுதி 11, பக்கம் 325-ல் 313 சஹாபிகளின் பட்டியலில் மூன்றாவது இடத்தில் மியான் தீன்பட்வாரி பலானி குஜ்ராத் மாவட்டம் எழுதியுள்ளார்கள்.

சவுத்ரி ஜமட் சாஹிப் 1966-ல் பஞ்சாப் யுனிவர்சிட்டியிலிருந்து எம் எஸ் ஸி புவியியில் டிகிரி பெற்றார்கள்.

கல்வித் துறையுடன் தொடர்புடையவராக திகழ்ந்தார்கள். 1966 முதல் 1968 வரை ரப்வாவின் தஃலீமுல் இஸ்லாம் காலஜில் பேராசிரியராக தொண்டாற்ற நற்பேறு பெற்றார்கள். அதேபோன்று, 1968 முதல் 1994வரை சுமார் 26ஆண்டுகள் வரை அன்னார் சிராலியோனில் கல்வித்துறையில் ஆசிரியராகவும், முதல்வராகவும் மிகவும் அழகிய முறையில் கடமைகளை நிறைவேற்றினார்கள். வாழ்வை அர்ப்பணித்தவராக இருந்தார்கள். ஆஃப்ரிக்காவிலிருந்து திரும்பிய பிறகு, அன்னார் 5ஆண்டுகள் இரண்டாவது நாயிப் வக்கீலுல் மால் ஆகவும், 7வருடங்கள் நாயிப் வக்கீலுல் மால் ஸாலிஸ் ஆகவும் தொண்டாற்ற நற்பேறு பெற்றார்கள். நான் கூறியதுபோன்று, சிராலியோனில் ஜமாஅத் பள்ளிக்கூடத்தில் கல்வி கற்பிக்கும் கடமையை நிறைவேற்றினார்கள். மேலும், 1971-ல் அன்னார் முறையாக வாழ்வை அர்ப்பணித்தார்கள். ஜனவரி 1, 2007-ல் அன்னார் வக்கீலுல் மால் ஸாலிஸாக நியமனம் செய்யப்பட்டார்கள். அதேபோன்று, அன்னாரின் தொண்டுகளுக்கான மொத்த காலம் பாதி நூற்றாண்டை விட கூடுதலாகும்.

அன்னாரின் துணைவியார் ரஷீதா லதீஃப் சாஹிபா கூறுகின்றார்கள்: எனது கணவர் சிராலியோனில் இருந்தார்கள். மேலும், நான் திருமணமாகி அங்கே சென்றேன். நான் அங்கு செல்லும்போது அன்னார் எனக்கு இவ்வாறு அறிவுரை செய்தார்கள். அதாவது, ஒரு வாழ்வை அர்ப்பணித்தவர் இங்கு ஆசிய பொருட்களை வாங்கி உண்பது என்பது மிகக் கடினம் ஆகும். வாழ்வை அர்ப்பணித்தவரும், அவரது மனைவியும் உள்ளூர் உணவையே உண்ண வேண்டும். எனவே நீ உள்ளூர் உணவை சமைப்பதற்கு கற்றுக் கொள். அதன் மூலம் நமக்கு எதிர்காலத்தில் வசதியாக இருக்கும்.

அன்னார் மிகவும் எளிய இயல்பு படைத்தவராக இருந்தார்கள். மிகவும் கருத்தில் கொண்டார்கள்.

அன்னாருடன் பணி செய்யக்கூடியவர்களும் அன்னாரின் அழகிய நடத்தையை மிகவும் குறிப்பிடுகிறார்கள். அனைவரும் அன்னாரை புகழ்கின்றார்கள். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அன்னாரின் உறவினர்களுக்கு பொறுமையை வழங்குவானாக. அன்னாரின் ஒரு பிள்ளை சிறு வயதிலேயே மரணமடைந்துவிட்டது. அன்னாருக்கு ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர். மர்ஹூமின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக.

மூன்றாவது நற்குறிப்பு, ஆஸாத் காஷ்மீர், மீர்பூரைச் சேர்ந்த மீரா பட்கா மதிப்பிற்குரிய முஹம்மது ஆலம் சாஹிப் மர்ஹூம் அவர்களின் மகனாகிய மதிப்பிற்குரிய முஸ்தாக் அஹ்மது ஆலம் சாஹிப் அவர்களுடையது ஆகும். ஜூலை 19, 2022 அன்று, 60-வது வயதில் அன்னார் மரணமடைந்துவிட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அல்லாஹ்வின் அருளால் மர்ஹூம் மூஸியாக இருந்தார். அன்னார் பின்விட்டுச் சென்றவர்களில், அன்னாரின் மனைவி அஸ்மத் பிபி சாஹிபாவைத் தவிர, ஆறு மகன்களும், இரண்டு மகள்களும் உள்ளனர். மூன்று மகன்களும், ஒரு மருமகனும் திருக்குர்ஆனை மனனம் செய்தவர்கள் ஆவர். மூன்று மகன்கள் ஜமாஅத் முரப்பிகள் ஆவர். அவர்களில் ஒருவர் ஹாஃபிழ் முஸவ்விர் அஹ்மது முஸ்ஸம்மில் ஆவார். அவர் மேற்கு ஆஃப்ரிக்காவில் செனிகாலில் உள்ளார். இரண்டாவது மகன் ஹாஃபிழ் அக்லாக் அஹ்மது ஆவார். மூன்றாவது மகன் அப்துல் காலிக் ஆவார். இவர் ஆர்கியாலஜியில் மேற்படிப்பு படித்து வருகிறார். அல்லாஹ் அவர்களுக்கும் பொறுமை மற்றும் தைரியத்தை வழங்குவானாக. மேலும், மர்ஹூமுடன் கருணையுடன் நடந்து கொள்வானாக. நான் கூறியதுபோன்று, தொழுகைக்குப் பிறகு, இவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன்.

தமிழாக்கம் :

மவ்லவி. A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *


**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 15 September 2022 Issue No. 37

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## தஃப்ஸீரே கபீர் - முதல் பக்கத் தொடர்ச்சி

திருக்குர்ஆன் வசனங்கள் ஒருபோதும் மாற்றப்படவில்லை என்றால், பின்னர் இந்த வசனத்திற்கு பொருள் என்ன என்ற கேள்வி இங்கு எழக்கூடும். ஆக, இதற்கு பதில் இதுவாகும். அதாவது, திருக்குர்ஆனில் பொதுவாக ஆயதுன் என்பதற்கு விண்ணின் அடையாளம் என்று எந்தப் பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளதோ அந்தப் பொருளே இந்த இடத்திலும் வரும்.

அல்லாஹ் கூறுகின்றான்: நாம் ஓர் அடையாளத்தை மாற்றிவிட்டு அந்த இடத்தில் வேறொரு அடையாளத்தை கொண்டு வரும்போது அவ்வாறு செய்வது ஆட்சேபனைக்குரியதாக இருக்காது. ஏனெனில், எந்த அடையாளம் எந்த இடத்தில் பொருத்தமானதாக இருக்கும் என்பதை அல்லாஹ்வே நன்கறிந்றான். ஆனால், நிராகரிப்பாளர்கள் ஆட்சேபனை செய்ய ஆரம்பித்துவிடுகின்றனர். நீர் பொய்யர் ஆவீர் என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால், இந்த ஆட்சேபனை அவர்களின் அறிவீனத்தை அடித்தளமாக கொண்டுள்ளது. இது எப்படிபட்ட சட்டம் என்றால், இது எல்லா நபியின் காலத்திலும் வெளிப்படுகிறது. அதாவது ஒவ்வொரு நபிக்கும் சில எச்சரிக்கை செய்திகள் கூறப்படுகின்றன. அவை உள்ளபடியே நிபந்தனைகளுக்கு உட்பட்டவையாக உள்ளன. எச்சரிக்கை வழங்கப்பட்ட சமுதாயம் தமது உள்ளத்தில் நிலையை மாற்றிக் கொண்டால், அதாவது மனம் திருந்திவிட்டால் பின்னர் அந்த தண்டனை செய்தி நீங்கிவிடுகிறது. உதாரணமாக, திருக்குர்ஆனில், ஹஸ்ரத் யூனுஸ் (அலை) அவர்களின் சம்பவம் கூறப்பட்டுள்ளது. அதாவது அவர்களின் அழிவின் செய்தி ஹஸ்ரத் யூனுஸ் (அலை) அவர்களின் மூலமாக வழங்கப்பட்டது. ஆனால், பின்னர் அவர்கள் தவ்பா செய்துவிட்டதன் காரணமாக அது மாற்றப்பட்டுவிட்டது.

எதிரி தவ்பா செய்துவிட்டால், பின்னர் நிர்ணயிக்கப்பட்ட அந்த தண்டனை நிறுத்தப்பட்டுவிடும் என்பது எச்சரிக்கை வடிவிலான முன்னறிவிப்புகளின் பொதுவான சட்டம் ஆகும். எனினும் வாக்குறுதியின் செய்தி நிச்சயம் நிறைவேறியேத் தீரும். ஆனால், அது தொடர்பான இறைவனின் நடைமுறை இதுவே ஆகும். அதாவது, எந்த சமுதாயத்திடம் வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளதோ அது முழு தியாகத்துடன் செயல்படவில்லையென்றால அல்லது முழுமையான கீழ்படிதலை வெளிப்படுத்தவில்லையென்றால், பின்னர் அந்த வாக்குறுதி முழுமையடைவதில் தாமதம் செய்யப்படுகின்றது. உதாரணமாக, மூஸா (அலை) அவர்களின் சமுதாயம் தொடர்பாக அல்லாஹ் கூறுகின்றான்: அவர்கள் தொடர்ந்து ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு கீழ்படியாமல் இருந்தபோது, எந்த வாக்களிக்கப்பட்ட பூமியில் நுழையச் செய்வதற்காக ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள், அந்த மக்களை எகிப்தில் இருந்து வெளியேற்றி அழைத்து வந்திருந்தார்களோ, அதன் வெற்றி 40 நாட்கள் வரை தடுக்கப்பட்டு விட்டது.

மேற்குறிப்பிட்ட சட்டத்திற்கேற்ப, எச்சரிக்கை வடிவிலான முன்னறிவிப்புகள் சிலநேரம் நீங்கிவிடும்போது, பாருங்கள்! இவர் பொய்யர் ஆவார். உண்மையாளராக அவர் இருந்திருந்தால் அவரது கூற்று எப்படி நிறைவேறாமல் இருந்திருக்கும் என்று நிராகரிப்பாளர்கள் கூச்சலிடுகின்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாகவும் இதுபோன்ற ஆட்சேபனைகளை எதிரிகள் செய்து வந்தனர். அதுகுறித்து, அல்லாஹ் கூறுகின்றான்: அடையாளங்கள் ஒரு நோக்கத்திற்காக இறங்குகின்றன. ஒரு நபர் தன்னை சீர்திருத்திக் கொண்டுவிட்டார் என்பதை நாம் காணும்போது, நாம் அவர் தொடர்பான எமது கட்டளையையும் மாற்றிக் கொள்கிறோம். நாம் அதனை ரத்துசெய்துவிடும்போது, அதற்குப் பகரமாக அந்த நபருக்காக நாம் எமது கருணையின் அடையாளத்தை காட்டுகின்றோம். ஏனெனில் தண்டனை வழங்குவது எமது நோக்கமன்று. மாறாக, சீர்திருத்தம் செய்வது (எமது நோக்கம்) ஆகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் அதுபோன்ற பல சந்தர்ப்பங்கள் வந்துள்ளன. உதாரணமாக, (இந்த வசனத்தையே எடுத்துக் கொள்வோம்.) அதாவது திருக்குர்ஆனில் அல்லாஹ் நிராகரிப்பாளர்கள் தொடர்பாக கூறுகின்றான்: لَا يُؤْمِنُوْنَ ஆனால், பின்னர் அவர்களில் ஏராளமான மக்கள் ஈமான் கொள்கின்றனர். இது தண்டனைக்கான செய்தியாக இருந்தது. அதன் காரணமாக, எந்தெந்த மக்கள் இறையச்சத்தை ஏற்படுத்திக் கொண்டார்களோ அவர்களின் தண்டனை மாற்றப்பட்டுவிட்டது. மேலும் அவர்களுக்கு ஈமான் வழங்கப்பட்டது.

வெளிப்படையில், இந்த விவகாரம் மிகத் தெளிவானதாகும். ஆனால், எப்போதுமே மக்கள் இது தொடர்பாக தடுமாற்றத்தை வெளிப்படுத்துகின்றனர். அதற்கு காரணம் என்னவென்றால், விஷயத்தை மாற்றுவதை மக்கள் பொய் எனக் கருதுகின்றனர். ஏனெனில், தண்டனையை மாற்றுவதை பொய் எனக் கூறமுடியாது. வாக்குறுதிக்கு மாற்றம் செய்வதே பொய் ஆகும். எனவே அரபி மொழியில் வாக்குறுதிக்கு மாற்றம் செய்வதை பொய் எனக் கூறுகின்றனர். வயீத் அதாவது தண்டனைக் குறித்த செய்தியை மாற்றுவதை பொய் என்று கூற முடியாது. மாறாக, அதனை கருணை மற்றும் நன்மை என்று கூறுவார்கள். அக்ரப் அகராதியில் எழுதப்பட்டுள்ளது:

اَلْخُلْفُ فِي الْوَعْدِ عِنْدَ الْعَرَبِ كَذِبٌ وَ فِي الْوَعِيْدِ كَرَمٌ

அதாவது, வாக்குறுதிக்கு மாற்றம் செய்வது அரேபியர்களை பொறுத்தவரை பொய் எனக் கூறப்படுகிறது. மேலும் வயீத் அதாவது, தண்டனை பற்றிய செய்தியை மாற்றுவது கண்ணியம் மற்றும் நன்மை என்றழைக்கப்படுகிறது.

சுருக்கமாக, இந்த வசனத்தின் ஒரு பொருள் இவ்வாறாகும். அதாவது, நாம் தண்டனைக் குறித்த செய்திகளை சில முறை மாற்றிவிடுகிறோம். நிராகரிப்பாளர்கள் அப்போது ஆட்சேபனை செய்கின்றனர். ஆனால், அவர்களின் ஆட்சேபனை சரியானதல்ல. அவ்வாறு செய்வது (தண்டனையை அகற்றுவது) நுட்பமான ஞானத்திற்கு முற்றிலும் ஏற்புடையதாகும். ஆட்சேபனை செய்வதற்கு அதில் எவருடைய உரிமையும் பறிக்கப்படுவதில்லை. இந்த பொருளின் அடிப்படையில் இந்த வசனத்தின் தொடர்பு இதற்கு முன்னர் எடுத்துரைக்கப்பட்ட அந்த எச்சரிக்கை வடிவிலான முன்னறிவிப்புகளுடன் தொடர்புடையதாகும்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4, பக்கம் 237,
காதியான் பதிப்பு 2010)

* * * * *

## திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய்தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A. Basheer Ahmad (Sec. Waqf-e-Jadid, Melapalayam)

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad